# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2026.03.17 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 447.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான விரிவுப் பெயரின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தில் தவறுகளின் நோக்கெல்லைக்குள் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரித்தல் என்ற தவறை சேர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், தெளிவு நோக்கங்களுக்காக, முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I இன் தலைப்பை மாற்றீடுசெய்கின்றது.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது, வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நிறுவனங்களினால் எதிர்மறை அடிப்படையிலான அணுகுமுறைசெய்யும் வாடிக்கையாளர் விழிப்பு கவனத்தையும் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது நிறுவனமொன்று வாடிக்கையாளர் விழிப்புக் கவனகடப்பாடுகளுடன் இணங்கியொழுகாதபோது பின்பற்றவேண்டிய நடவடிமுறையை ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவனமொன்று வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பான பதிவுகளை எக்காலத்திற்கு எம்முறையில் பேணவேண்டும் என்பதை குறித்துரைப்பதுமாகும்.

***வாசகம் 7*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வாடிக்கையாளர்களின் இற்றைப்படுத்தப்பட்ட பதிவுகளை பேணுவதற்கு நிறுவனங்களை தேவைப்படுத்துவதுமாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட எல்லையை விஞ்சுகின்ற கொடுக்கல்வாங்கல்களை நிதிசார் உளவறிதற்கூறிற்கு அறிக்கையிடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 9*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அல்லது தகவலை நிதிசார் உளவறிதற்கூறிற்கு அறிக்கையிடுவதற்கு நிறுவனங்களை தேவைப்படுத்துவதுமாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பயங்கரவாதத்துடன் தொடர்புடைய ஆதனம் தொடர்பான தகவலை நிதிசார் உளவறிதற்கூறிற்கு வெளிப்படுத்துவதற்கு நிறுவனங்களை தேவைப்படுத்துவதுமாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பான தகவலை வெளிவிடாதிருப்பதிலிருந்து ஆட்களை தடுப்பதுமாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை

பெருமளவில் தயாரித்தல் தவறின் புலனாய்வில் மற்றும் குற்றவழக்கில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பான தகவலை வெளிப்படுத்துவதற்கு அனுமதிப்பதுமாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது நீதித்துறை நடவடிக்கைமுறைகளில் தகவலை வெளிப்படுத்துவதற்கு அனுமதிப்பதுமாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைக்காக ஆட்களுக்கு சட்ட பாதுகாப்பை ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சிறப்புரிமைபெற்ற தகவல்தொடர்புக்கான சட்ட பாதுகாப்பை ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது இணக்க அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு நிறுவனங்களை தேவைப்படுத்துவதுமாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் IIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்புதிய பாகத்தின் சட்டப்பயனானது, நிதிசார் உளவறிதற்கூறை தாபிப்பதற்கும் நிதிசார் உளவறிதற்கூறினுடைய தலைவரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை குறித்துரைப்பதற்கும் ஏற்பாடுகளை செய்வதுமாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நிதிசார் உளவறிதற் கூறின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் தகவலைப் பறிமாறிக்கொள்வதற்கு நிதிசார் உளவறிதற்கூறிற்கு ஏற்பாட்டை செய்வதுமாகும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இருவயினொப்பின் அடிப்படையில் வெளிநாட்டு ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரசபைகளுடன் தகவலை பகிர்ந்து கொள்வதற்கு நிதிசார் உளவறிதற்கூறை அனுமதிப்பதுமாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நிதிசார் உளவறிதற்கூறின் அலுவலர்கள் ஏதேனும் வளவுகளில் உட்புகுத்துவதற்கும் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இயைபான பதிவேடுகளை பரிசோதிப்பதற்கும் ஏற்பாட்டை செய்வதுமாகும்.

***வாசகம் 22*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது இச்சட்டத்தின்கீழான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை வலுவுக்கிடுவதற்கு நிருவாக தண்டனைகளை விதிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதுமாகும்.

***வாசகம் 23*** : இவ்வாசகம், அதிக தெளிவுக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 24*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் III அ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்புதிய பாகத்தின் சட்டப்பயனானது, பணம் தூய்தாக்கல் தடுப்பு, பயங்கரவாத நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரித்தல் எதிர்ப்பு மீதான தேசிய குழுவொன்றை தாபிப்பதற்கும் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை குறித்துரைப்பதற்கும் ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 25*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தில் தவறுகளின் நோக்கெல்லையினுள் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரித்தலை உள்ளடக்குவதற்கு விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 26*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது இணங்கியொழுகுதலை வலுவுறுத்துவதற்கு நிறுவனங்களின் தொடர்ச்சியான பரிசீலனையை நடாத்துவதற்கு மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளுக்கான ஏற்பாடுகளை செய்வதுமாகும்.

***வாசகம் 27*** : இவ்வாசகம், தெளிவு நோக்கங்களுக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் பாகத்தின் தலைப்பை மாற்றீடு செய்கின்றது.

***வாசகம் 28*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆங்கில மற்றும் சிங்கள உரைகளில் குறித்தசில ஒவ்வாமைகளை சரிசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 29*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆங்கில மற்றும் சிங்கள உரைகளில் குறித்தசில ஒவ்வாமைகளை சரிசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 30*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆங்கில மற்றும் சிங்கள உரைகளில் குறித்தசில உரை ஒவ்வாமைகளை சரிசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 31*** : இவ்வாசகம், குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையை விஞ்சுகின்ற பணத்துடன் அல்லது கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களுடன் இலங்கைக்கு வந்தடைகின்றதற்காக அல்லது இலங்கையை விட்டுச்செல்கின்றதற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை மீளாய்வு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது.

***வாசகம் 32*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தவறுகளுக்கு ஏற்புடையற்பாலதான தண்டப்பணங்களை மீளாய்வு செய்வதற்குமாகும்.

***வாசகம் 33*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது ஆட்கள் குழுவினால் புரியப்பட்ட தவறுகளுக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 34*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது நிதித் தொழில் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாராத தொழில் என்றவாறான ஏதேனும் தொழிலை விதித்துரைப்பதற்கு அமைச்சருக்கு ஏற்பாட்டை செய்வதுமாகும்.

***வாசகம் 35*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 29அ, 29ஆ மற்றும் 29இ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்பிரிவுகளின் சட்டப்பயனானது நிதிசார் உளவறிதற்கூறின் தலைவருக்கு சட்டத்தின்கீழ் விதிகள் பணிப்புக்கள் முதலியவற்றை ஆக்குவதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 36*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 30அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது, வெளிநாட்டு வங்கிகளின் சான்றுப்படுத்தப்பட்ட கூற்றுக்களின் ஏல்தகவுடைமைக்கு ஏற்பாடுசெய்வதுமாகும்.

***வாசகம் 37*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகள், சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகள், மேற்பார்வை அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்களை முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு தேவைப்படுத்துகின்ற ஏற்பாடுகளை செய்வதுமாகும்.

***வாசகம் 38*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது, வெளிநாட்டு கிளைகள் மற்றும் துணை நிறுவனங்களுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமைக்காக ஏற்பாட்டை செய்வதுமாகும்.

***வாசகம் 39*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தில் சொல்லமைப்பின் குறித்தசில ஏலவேயுள்ள வரைவிலக்கணங்களை திருத்துவதும் சொல்லமைப்பின் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதுமாகும்.

## நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தம்)

ச.வ.ஓ – 40/2021

### 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்

**2.** (இச்சட்டத்தில் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்திற்கான விரிவுப்பெயர், “பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தவறுகளை முறையே தடுப்பதற்கும், கண்டுப்பிடிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் அத்துடன் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் வசதியளிப்பதற்காக சந்தேகத்திற்கிடமான நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டுவதற்கும்; பணம் தூய்தாக்குதலையும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதனையும் முறியடிப்பதற்கு உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு குறித்தசில நிறுவனங்களைத் தேவைப்படுத்துவதற்கும்,” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்ற தவறுகளைத் தடுப்பதற்கும், கண்டுப்பிடிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் அத்துடன் அவற்றுக்கெதிராக குற்றவழக்குத் தொடுப்பதற்கும் வசதியளிப்பதற்காக சந்தேகத்திற்கிடமான நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டுவதற்கும்; பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு

PL15661 - 470 (2026/02)

நிதியளித்தல் என்ற தவறுகளை முறியடிப்பதற்கு உரிய விழிப்புக்கவன வழிமுறைகளைப் பொறுப்பேற்குமாறு குறித்தசில நிறுவனங்களைத் தேவைப்படுத்துவதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I இலுள்ள தலைப்பை மாற்றீடுசெய்தல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்கு நேர்முன்னரான பாகம் I இல் காணப்படுகின்ற தலைப்பு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் தலைப்பு இடப்படுகின்றது:-

"நிறுவனங்களின் கடமைகளும், ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையும் மற்றும் வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவனமும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறை, வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவனம் முதலியன

**2.(1)** ஒவ்வொரு நிறுவனமும் இச்சட்டத்தின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கு, பணிப்புக்களுக்கு மற்றும் வழிகாட்டுநெறிகளுக்கமைய, அதன் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பவற்றை அடையாளம் காண்பதற்கான, மதிப்பீடு செய்வதற்கான, முகாமை செய்வதற்கான மற்றும் தணிப்பதற்கான ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையை ஏற்புடையதாக்குதல் வேண்டும்.

(2) ஓர் ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்காக, நிறுவனமொன்று –

(அ) அதன் வாடிக்கையாளர்களுடன் இணைந்த பணம் தூய்தாக்கல்,

பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பன அவ்வாடிக்கையாளர்கள் எந்த நாடுகளில் மற்றும் பிராந்தியங்களில் தொழிலில் ஈடுபட்டுள்ளனரோ அந்த நாடுகள் மற்றும் பிராந்தியங்கள், அவர்களின் உற்பத்திப் பொருட்கள், சேவைகள் மற்றும் வழங்குகை வழிகள் என்பவற்றின் மதிப்பீடொன்றைப் பொறுப்பேற்றல் வேண்டும்;

(ஆ) பணிப்பாளர் சபையின் அல்லது சிரேட்ட முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் மற்றும் இச்சட்டத்தின் கீழ் அல்லது அந்நிறுவனத்துக்கு ஏற்புடையற்பாலதான வேறேதேனும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புக்கள் அத்துடன் வழிகாட்டுநெறிகள் என்பவற்றுக்கும் இணங்க, பந்தி (அ) வினைப் பின்பற்றி அடையாளம் காணப்பட்ட பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பவற்றை முகாமை செய்வதற்கும், தணிப்பதற்குமான

உள்ளகக் கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் முறைமைகளையும் வடிவமைத்தலும், விருத்தி செய்தலும், பேணுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆபத்துக்கள் பற்றிய மதிப்பீடு நாளதுவரையாக இருப்பதனையும் மற்றும் அத்தகைய ஆபத்துக்களை முகாமைசெய்வதற்கும் தணிப்பதற்கும் போதிய வழிமுறைகள் நிலைப் படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்கு அதனைக் காலாகாலரீதியில் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(3) நிறுவனமொன்று கணக்கு வைத்திருப்பவர் பெயர் தெரியாத கணக்கு அல்லது இலக்கம் மட்டும் மூலம் அடையாளங்காணப்படும் ஏதேனும் கணக்கு அல்லது நிறுவனத்தின் அறிவுக்கு போலியான அல்லது பொய்யான பெயரில் தொழிற்படுகின்ற ஏதேனும் கணக்கு உள்ளடங்கலாக, கணக்கு வைத்திருப்பவர் அடையாளங் காணப்பட முடியாதவிடத்து, கணக்கொன்றை திறத்தல், தொழிற்படுத்துதல் அல்லது பேணுதல் ஆகாது.

(4) நிறுவனமொன்று –

(அ) வாடிக்கையாளரொருவருடன் தொழில்சார் உறவொன்றைத் தாபிக்குமிடத்து;

(ஆ) தனியொரு தொழிற்பாட்டை அல்லது இணைந்தவையாகத்

தோன்றுகின்ற பல தொழிற் பாடுகளைக் கொண்டுள்ள ஒரு கொடுக்கல்வாங்கல் உட்பட, விதிகளினால் குறித்துரைக்கப் பட்டவாறு தொடக்கநிலைக்கு மேலாக இடைக்கிடையேயான கொடுக்கல் வாங்கலொன்றை நிறைவேற்றுமிடத்து;

(இ) விதிகளினால் குறித்துரைக்கப் பட்டவாறு தொடக்க நிலைக்கு மேலாக ஒரு வங்கியிடைப் பணமாற்றுகையாகவுள்ள இடைக்கிடையேயான கொடுக்கல்வாங்கல் ஒன்றை நிறைவேற்றுமிடத்து;

(ஈ) ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை அல்லது தொடக்க நிலையைப் பொருட்படுத்தாது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல், பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாடு என்ற தவறாக அமைகின்ற செயலொன்றுபற்றி நியாயமான சந்தேகத்தை ஏற்றுக்கவனிக்குமிடத்து; அல்லது

(உ) வாடிக்கையாளரின் அடையாளங் காணல் ஆவணங்களின் அல்லது ஏலவே பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் உண்மையான தன்மை அல்லது போதியதான

தன்மை பற்றி ஐயங்களை ஏற்றுக்கவனிக்குமிடத்து,

அத்தகைய நிறுவனமொன்று, வாடிக்கையாளர் உரிய கவனத்தை எடுத்தல் வேண்டும்

(5) இச்சட்டத்தின்கீழ் நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கமைய, வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தை நடாத்தும் நோக்கத்துக்காக -

(அ) நிரந்தரமானவராயினுஞ்சரி அல்லது இடைக்கிடையேயானவராயினுஞ்சரி அல்லது ஓர் இயற்கை ஆளாகவிருப்பினுஞ்சரி அல்லது சட்ட ஆளாகவிருப்பினுஞ்சரி அல்லது சட்ட ஒழுங்கேற்பாடாகவிருப்பினுஞ் சரி, ஒவ்வொரு வாடிக்கையாளரையும் அடையாளங் காணுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அலுவலக முறையான ஆவணத்தின் அல்லது வேறு நம்பகமான மூல ஆவணத்தின், தகவலின் அல்லது தரவின் அடிப்படையின் மீது அத்தகைய வாடிக்கையாளரின் அடையாளத்தைச் சரிபார்த்தலும் வேண்டும்;

(ஆ) ஒரு வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுபவராகக் கொள்ளப் படுகின்ற ஆளொருவரின் விடயத்தில், அத்தகைய ஆள் அத்தகைய வாடிக்கை யாளரினால் அதிகாரமளிக்கப்படுகின்றார் என்பதைச் சரிபார்த்தல் வேண்டும் என்பதுடன்

ஏதேனும் அலுவலகமுறையான ஆவணத்தின் அல்லது வேறு நம்பகமான மூல ஆவணத்தின், தகவலின் அல்லது தரவின் அடிப்படையின்மீது அத்தகைய ஆளை அடையாளங்காணுதலும் அத்தகைய ஆளின் அடையாளத்தைச் சரிபார்த்தலும் வேண்டும்;

(இ) வாடிக்கையாளரின் பயனுகர் சொந்தக்காரர் எவரேனுமிருப்பின், அவரை அடையாளங் காணுதல் வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளரின் பயனுகர் சொந்தக்காரர் பற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கென ஏதேனும் அலுவலக முறையான ஆவணத்தின் அல்லது வேறு நம்பகமான மூல ஆவணத்தின், தகவலின் அல்லது தரவின் அடிப்படையின்மீது அத்தகைய பயனுகர் சொந்தக்காரரின் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஒரு வாடிக்கையாளருடனான உட்கருதப்பட்ட தொழில்சார் உறவின் தன்மையையும் நோக்கத்தையும் விளங்கிக் கொள்வதற்கென வேறேதேனும் இயைபான ஆவணத்தை, விடயத்தை அல்லது தரவைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கமைய, நிறுவனமொன்று –

(அ) பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல், அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பவற்றை உயர்வானவையாக மதிப்பீடு செய்யப்படுகின்றவிடத்து, வாடிக்கையாளரின் அதிகரித்த உரிய விழிப்புக்கவனத்தை நடாத்துதல் வேண்டும்;

(ஆ) பணம் தூய்தாக்கல் அல்லது பயங்கரவாதி நிதியளித்தல் ஆபத்துக்கள் குறைவானவையாக மதிப்பீடு செய்யப்படுகின்றவிடத்து, வாடிக்கையாளரின் எளிமையாக்கப்பட்ட உரிய விழிப்புக்கவனத்தை நடாத்தலாம்; அத்துடன்

(இ) பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் ஆபத்துக்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் நிறைவேற்றப்பட்டவழிமுறைகள், அத்தகைய ஆபத்துக்கள் குறைவானவையாக மதிப்பீடு செய்யப்படுகின்றவிடத்து, ஆபத்துக்களின் மட்டத்துடன் விகிதாசாரப்படி இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(7) நிறுவனமொன்று இச்சட்டத்தின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறினால் வழங்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கமைய, (4) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (உ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சூழ்நிலைகளில் வேறொரு நிறுவனத்துடன் (5) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (ஈ) வரையிலான பந்திகளில் பெறப்பட்ட எவையேனும் தகவல்களை பகிரலாம்.

(8) நான்காம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, பண அல்லது இலத்திரனியல் நிதிக் கைமாற்றல் தொடர்பாக "இடைக்கிடையேயான கொடுக்கல்வாங்கல்" என்று, காலத்துக்குக்காலம் ஆனால், கிரமமானவோர் அடிப்படையிலல்லாமல் எவரேனுமாளினால் நடாத்தப்படும் ஏதேனும் கொடுக்கல்வாங்கல் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"வாடிக்கை யாளரின் உரிய விழிப்புக்கவன கடப்பாடுகள் இணங்கியொழுக முடியாதிருப்பின் நடவடிக்கை முறை

**3.(1)** இரண்டாம் அல்லது 5 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறு வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவனக் கடப்பாடுகளுக்கு நிறுவனமொன்று இணங்கியொழுக இயலாதிருப்பின், அத்தகைய நிறுவனம் –

(அ) வாடிக்கையாளருடன் கணக்கைத் திறத்தலாகாது அல்லது தொழில்சார் உறவைத் தொடங்குதலாகாது அல்லது கொடுக்கல்வாங்கலைப் புரிதலாகாது; அல்லது

(ஆ) வாடிக்கையாளருடனான தொழில்சார் உறவை முடிவுறுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய நிறுவனம் 7 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய வாடிக்கையாளர் தொடர்பாகச் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றைச் செய்வதனை கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், பணம் துய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் எனும் தவறைப் புரிவதனை அத்தகைய நிறுவனம் சந்தேகிக்கப்படுகின்றவிடத்து அல்லது சந்தேகிக்கப்படுவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, மற்றும் வாடிக்கையாளர் உரிய கவனத்தை எடுத்தல் துப்புக் கொடுக்கின்றது என்று நம்புவதற்கான காரணங்கள் இருப்பின், அத்தகைய நிறுவனம் வடிக்கையாளாருக்குரிய விழிப்புக்கவனத்தை நடாத்துதல் ஆகாது என்பதுடன் 7 ஆம் பிரிவின்கீழ் சந்தேகத்துக்கிடமான கொடுக்கல் வாங்கலொன்றை செய்தல் வேண்டும்.".

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக் கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) ஒவ்வொரு நிறுவனமும் –

(அ) நிதிசார் உளவறிதற் கூறுக்குக் கொடுத்துதவப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் பற்றிய பதிவேடுகளையும், எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் தொடர்பான கடிதத்தொடர்பு

பற்றிய பதிவேடுகளையும், எல்லா அறிக்கைகளும் பற்றிய பதிவேடுகளையும், விடயத்துக் கேற்ப, கொடுக்கல்வாங்கல், கடிதத்தொடர்பு அல்லது அறிக்கையின் கொடுத்துதவுகை பூர்த்திசெய்யப்பட்ட தேதியி லிருந்து ஆறாண்டுக் காலப்பகுதி யொன்றுக்கு; அத்துடன்

(ஆ) பொறுப்பேற்கப்பட்டவொரு பகுப்பாய்வின் பெறுபேறுகள், ஆபத்து மதிப்பீடுகளும் வாடிக்கை யாளரின் கணக்குக் கோப்புகளும் மற்றும் தொழில்சார் கடிதத் தொடர்புகளும் உள்ளடங்கலாக, 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவனம் செய்முறையின் பாகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட பதிவேடுகளை விடயத்துக்கேற்ப, கணக்கு மூடப்பட்ட தேதியிலிருந்து அல்லது தொழில்சார் உறவு இல்லாதொழிந்த தேதியிலிருந்து அல்லது அத்தகையவோர் உறவு இராதிருப்பின், இடைக்கிடையேயான கொடுக்கல்வாங்கல் தேதியிலிருந்து, ஆறாண்டு காலப்பகுதியொன்றுக்கு,

நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர், அவரினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நீண்ட காலப்பகுதிக்கு அத்தகைய பதிவேடுகள் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்ற பொருள்பட பணிப்புகளை வழங்கியிருந்தாலொழிய, பேணுதல்

வேண்டும்; இவ்விடயத்தில் அத்தகைய பதிவேடுகள் அத்தகைய நீண்ட காலப்பகுதிக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "நிதிசார் உளவறிதற் கூறினால் வழங்கப்பட்ட விதிகளின் குறித்துரைக்கப்படக்கூடியவாறான" எனும் சொற்களுக்குப் பதிலாக "நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(3) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் பதிவேடு பேணப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றவிடத்து –

(அ) நிதிசார் உளவறிதற் கூறிடமிருந்து அல்லது ஒரு சட்ட வலுவுறுத்துகை முகவராண்மையிடமிருந்து தகவல்களுக்கான உடனடியாக இணங்கியொழுகுவதனை இயலச்செய்யும் ஒரு முறையிலும் படிவத்திலும் அது பேணப்படுதல் வேண்டும்;

(ஆ) அதன் பிரதியொன்று –

(i) ஒரு பத்திரப் பிரதி அதிலிருந்து உடனடியாகத் தோற்றுவிக்கப்பட முடியுமானதாக இருப்பின், இயந்திரத்தில் வாசிக்கத் தக்க படிவமொன்றில்;

(ii) ஒரு பத்திரப் பிரதி அதிலிருந்து உடனடியாகத் தோற்றுவிக்கப்பட முடியுமானகைவிருந்து பதிவேட்டை வைத்திருக்கும் ஆளின் இலத்திரனியல் கையொப்பமொன்று சரிபார்த்தல் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படின், இலத்திரனியல் படிவமொன்றில்; அல்லது

(iii) ஓர் ஒலிக்கோப்பு அல்லது காணொளி பதிவுசெய்கை வடிவத்தில்,

வைத்திருக்கப்படலாம்; அத்துடன்

(இ) அவசியமானவிடத்து, குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் சான்றைக் கொடுத்துதவும் நோக்கத்துக்காக தனிப்பட்ட கொடுக்கல்வாங்கலின் மீளமைப்பை இயலச்செய்யும் ஒரு முறையிலும் படிவத்திலும் அது பேணப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆ) ஆம் என்னும் பந்தியில், "நுண்ணாய்வையும் நடாத்துதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நுண்ணாய்வையும் நடாத்துதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவனச் செயன்முறை யினூடாகத் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், தகவல்கள் அல்லது தரவுகள் நாளதுவரையாகவும் ஏலவேயுள்ள பதிவேடுகளையும் மீளாய்வு செய்வதன்மூலம் இயைபானவையாகவும் வைத்திருக்கப் படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"வாடிக்கையாளர்களின் மேற்கொள்ளப் பட்டு வருகின்ற உரிய விழிப்புக்கவனமும் கொடுக்கல் வாங்கல்களின் நுனித்தாராய்வும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நிறுவனங்கள் நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கை யிடுதல்

**6.(1)** நிறுவனமொன்று, நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் மற்றும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுகின்றவொரு தொகையாகவுள்ள அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமாகவிருக்கும் தொகையாகவுள்ள –

(அ) பெறுநர் மற்றும் அனுப்புநர் ஆகிய இருவரும் மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட வங்கிகளாக

இருந்தாலொழிய, பணத்திலான ஏதேனும் கொடுக்கல்வாங்கலை; அத்துடன்

(ஆ) ஒரு வாடிக்கையாளரின் ஏதேனும் இலத்திரனியல் நிதிக் கைமாற்றத்தை,

நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, வெவ்வேறு வகுதிகளிலான நிறுவனங்கள் தொடர்பில் அமைச்சர் வெவ்வேறு தொடக்கநிலைகளைக் குறித்துரைக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) நிறுவனமொன்று –

(அ) ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல், ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது வேறேதேனும் குற்றவியல் தவறொன்றைப் புரிவதுடன் தொடர்புபட்டதாக இருக்கக்கூடுமெனச் சந்தேகிக்குமிடத்து அல்லது சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) ஏதேனும் தகவல் –

(i) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்கு ஆயத்த நிலையான செயலொன்றுக்கு;

(ii) ஒரு சட்டமுறையற்ற செயற்பாடாக அமைகின்ற, அல்லது 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தையும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தையும் வலுவுறுத்துகையில் வேறுவகையாக உதவியாக இருக்கக்கூடிய செயலொன்றுக்காக ஆளொருவரின் அல்லது ஆட்களின் புலனாய்வொன்றுக்கு அல்லது குற்ற வழக்கொன்றுக்கு; அல்லது

(iii) பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்ற தவறாக அமைகின்ற ஏதேனும் செயலின் புரிகைக்கு,

செயல்முறைக்குகந்தவாறு விரைவாக, நிறுவனமானது அச்சந்தேகத்தை உருவாக்கிய பின்னர் அல்லது தகவல்களைப்

பெற்றபின்னர், ஆனால் அதிலிருந்து இரண்டு வேலைநாட்களுக்குப் பிந்தாமல், அக்கொடுக்கல்வாங்கலை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலை அல்லது தகவல்களை நிதிசார் உளவறிதற் கூறின் தலைவருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(அ) எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அல்லது தொலைபேசிமூலம் இருத்தல் வேண்டும்; இவ்விடயத்தில் அது இருபத்துநான்கு மணித்தியாலங்களினுள் எழுத்தில் பின்தொடரப்படுதல் வேண்டும் அல்லது அதற்கென நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட பணிப்புக்கள் என்றவகையாகக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் பின்தொடரப்படுதல் வேண்டும்;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஆ) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட பணிப்புகள் என்றவகையாக குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய விபரங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்;"; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

“நிதிசார் உளவறிதற்
கூறுக்கு
தகவல்களை
வெளிவிடுவதற்கு
நிறுவனங்களுக்குள்ள கடமை.”.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பயங்கரவாதச் செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்ட ஆதனமாக” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட ஆதனமாக” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

“(ஆ) அத்தகைய ஆளின் சொத்தாண்மையில், உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும் பயங்கரவாதத்துடன் தொடர்பு பட்டதுமான ஏதேனும் ஆதனம், குறித்துரைக்கப்பட்டவொரு தனியாளினால் அல்லது

உருவகத்தினால் அல்லது அவர்சார்பில் அல்லது அதன்சார்பில் சொந்தமாக வைத்திருக்கப்படின், உடைமைக் கொள்ளப்படின், அல்லது கட்டுப்படுத்தப்படின் அல்லது அது குறித்துரைக்கப் பட்டவொரு தனியாளினால் அல்லது உருவகத்தினால் அல்லது அவர் சார்பில் அல்லது அதன் சார்பில் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றது, உடைமைகொள்ளப்படுகின்றது அல்லது கட்டுப்படுத்தப் படுகின்றது என்று சந்தேகிப்பதற்கான நியாயமான ஏதுக்களுள்ள அத்தகைய ஆதனம் இருப்பதைப் பற்றி;";

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பயங்கரவாதச் செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்ட ஆதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட ஆதனம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அல்லது

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பயங்கரவாதச் செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்ட ஆதனத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட ஆதனத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை மீள இலக்கப்படுவதன் உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட ஆதனம்" என்பது பின்வருவன என்று பொருள்படும் –

(அ) ஒரு பயங்கரவாதச் செயலைப் புரிவதிலிருந்தான வரும்படிகள்;

(ஆ) ஒரு பயங்கரவாதச் செயலைப் புரிவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படும் சாத்தியம் கொண்டுள்ள அல்லது அதன் புரிகைக்கு இடைநேர்விளைவாகவுள்ள ஆதனம்;

(இ) ஒரு பயங்கரவாதக் குழுவினால் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படும் சாத்தியம் கொண்டுள்ள ஆதனம்;

(ஈ) ஒரு பயங்கரவாதக் குழுவினால் அல்லது அதன் சார்பில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஆதனம்; அல்லது

(உ) ஒரு பயங்கரவாதச் செயலுக்கு நிதியளிப்பதற்காக பயங்கரவாதக் குழுவொன்றுக்கு ஆதரவு வழங்கும் நோக்கத்துக்காகச் சேகரிக்கப்பட்டுள்ள ஆதனம்."; அத்துடன்

(4) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட ஆதனம் தொடர்பான தகவல்களை வெளிவிடுவதற்கான கடமை".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) "வேறு எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வேறு எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(இ) எந்த ஆளுக்குத் தகவல் வெளிவிடப்படுகின்றதோ அந்த ஆள் எந்தத் தகவலிலிருந்து சந்தேகமொன்று உருவாக்கப்பட்டுள்ளது அல்லது அறிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்படக்கூடும் என ஊகிக்கலாமென நியாயமாக எதிர்பார்க்கலாமோ அந்த வேறேதேனும் தகவலை,"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(அ) இச்சட்டத்தின்கீழ் அறிக்கையைச் செய்கின்ற ஆளின் அலுவலர்

அல்லது ஊழியர் அல்லது முகவர் ஒருவருக்கு, அவர்களின் கடமைகளைப் புரிதலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் நோக்கத்திற்காக;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தகவலை" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தகவலை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (i) ஆம் உட்பந்தியில், "வழக்குத் தொடரும்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழக்குத் தொடரும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்தியில், "அல்லது நடைமுறைப்படுத்தும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது நடைமுறைப்படுத்தும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(iii) பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்ற தவறை உருவாக்குகின்ற ஏதேனும் செயலுக்காக ஆளொருவரைப் புலனாய்வு செய்யும் அல்லது அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கும்.".

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்

"நீதிமுறை வழக்கு நடவடிக்கை களில் வெளிவிடுகை தடுக்கப்படு தலாகாது

**11.** தகவலின் வெளிவிடுகையைத் தடைசெய்கின்ற இச்சட்டத்தினதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, 9 ஆம் அல்லது 10 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், ஒரு நீதிமன்றத்தின் முன்னரான வழக்குநடவடிக்கைகள் சம்பந்தமாக அல்லது அவற்றின்போது ஏதேனும் தகவல் வெளிவிடப்படுவதனைத் தடுத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், நீதிநலன்கருதி தகவலை வெளிவிடுதல் அவசியமாகவுள்ளதென நீதிபதி அல்லது தலைமைதாங்கும் அலுவலர் திருப்திப்பட்டாலொழிய, இப்பிரிவு ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் தகவலை ஆளொருவர் எவையேனும் நீதிமுறை வழக்குநடவடிக்கைகளில் வெளிவிடுதலாகாது.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1)(அ) ஒரு நிறுவனத்துக்கு அல்லது ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அல்லது அத்தகைய நிறுவனத்தின் ஒரு மேற்பார்வை அதிகாரிக்கு எதிராக; அல்லது

(ஆ) அத்தகைய நிறுவனத்தில் அல்லது அத்தகைய

நிறுவனத்தின் முகவராண்மையில் ஒரு பணிப்பாளர், பங்காளர், அலுவலரொருவர், ஊழியர் அல்லது முகவராக அத்தகைய ஆளின் தொழிலின்போது செயலாற்றுகின்ற, அல்லது அத்தகைய நிறுவனம், தகைமைபெற்ற கணக்காய்வாளர் அல்லது மேற்பார்வை அதிகாரியின் சார்பில் செயலாற்றுகின்ற ஒரு பணிப்பாளர், பங்காளர், அலுவலரொருவர், ஊழியர் அல்லது முகவருக்கு எதிராக,

இச்சட்டத்தின் நியதிகளின்படி நல்லெண்ணத்துடன் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அல்லது இச்சட்டத்தின் நியதிகளின்படி நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்பட்ட விதிகளுக்கு அல்லது பணிப்புகளுக்கு இணங்கியொழுக, அத்தகைய நிறுவனத்தினால், தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் அல்லது மேற்பார்வை அதிகாரியினால், அல்லது அத்தகைய நிறுவனத்தின் ஒரு பணிப்பாளரினால், பங்காளரினால், ஓர் அலுவலரினால், ஊழியரினால் அல்லது முகவரினால், தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் அல்லது மேற்பார்வை அதிகாரியினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் நடவடிக்கை தொடர்பாகக் குடியியல், குற்றவியல் அல்லது ஒழுக்காற்று வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.”;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள கீழான தவறொன்றுக்கான” என்னும் சொற்களுக்கும்

எண்களுக்கும் பதிலாக, “இச்சட்டத்தின் 28 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறொன்றுக்கான” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

“(3) நிறுவனம், தகமை பெற்ற கணக்காய்வாளர் அல்லது மேற்பார்வை அதிகாரி அல்லது அத்தகைய நிறுவனத்தின், தகமை பெற்ற கணக்காய்வாளரின் அல்லது மேற்பார்வை அதிகாரியின் எவரேனும் பணிப்பாளர், பங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் என்போர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறிக்கையொன்றை செய்கின்ற அத்தகைய நிறுவனம், தகமை பெற்ற கணக்காய்வாளர் அல்லது மேற்பார்வை அதிகாரி, பணிப்பாளர், பங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் போன்ற தவறுகளுக்கு குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கங்களுக்காக, எந்நேரத்திலும் அத்தகைய உடமையில் இருந்திருக்க வில்லையென கருதப்படுதல் வேண்டும்.”.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"இப்பிரிவின் நோக்கங்களுக்காக, தகவல் தொடர்பாடலொன்று –

(அ) வாய்மொழியாக இருப்பினுஞ்சரி அல்லது எழுத்திலிருப்பினுஞ்சரி –

(i) தமது உயர்தொழில்சார் தன்மையில் வழக்குரைஞர் அல்லது சட்ட ஆலோசகர் ஒருவருக்கும், மற்றும் அத்தகைய தன்மையில் வேறொரு பரிஸ்டருக்கும், மன்றாடியாருக்கும், வழக்குரைநருக்கும், சட்டத்தரணிக்கும் அல்லது சட்ட ஆலோசகருக்கும் இடையில் பரிமாறப்படும் அந்தரங்கத் தகவல் தொடர்பாடலாக இருக்குமாயின் மட்டும்; அல்லது

(ii) தமது உயர்தொழில்சார் தன்மையில் வழக்குரைஞர் ஒருவருக்கும் அல்லது சட்ட ஆலோசகருக்கும் அத்துடன் கட்சிக்காரருக்குமிடையில் ஒன்றில் நேரடியாக வாயினுஞ்சரி அல்லது முகவர் ஒருவரினூடாக நேரடியாகவல் லாமலாயினுஞ்சரி பரிமாறப்படும் அந்தரங்கத் தகவல் தொடர்பாடலாக இருக்குமாயின் மட்டும் சிறப்புரிமை பெற்ற தொடர்பாடலொன்றாக இருத்தல் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுக:-

"(இ) ஏதேனும் சட்டவிரோதமான அல்லது சட்டமுறையற்ற செயற்பாட்டினை புரியும் நோக்கத்துக்காக அல்லது புரிதலை முன்னெடுத்தலுக்கான நிலைத் திருப்பினை செய்திருக்கவில்லை அல்லது கொணரப்படவில்லை;" அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "(ஒரு வழக்குரைஞராக இருப்பினுஞ்சரி அல்லது அவரது கட்சிக்காரராக அல்லது வேறு எவரேனும் ஆளாக இருப்பினுஞ்சரி)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(ஒரு வழக்குரைஞராக, கட்சிக்காரராக அல்லது வேறு எவரேனும் ஆளாக இருப்பினுஞ்சரி)" என்னும் சொற்களையும் "வழக்குரைஞரின் நம்பிக்கைப்பொறுப்புக் கணக்கொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழக்குரைஞரின் நம்பிக்கைப்பொறுப்புக் கணக்கொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"இணக்க அலுவலரின் நியமனம் மற்றும் இணக்கத் துடன் தொடர்புடைய நிறுவனத்தின் கடமைகளும் பணிகளும்

14. நிறுவனம் ஒவ்வொன்றும் –

(அ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு நிறுவனம் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்றமைக்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய இணக்க அலுவலரொருவராக சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில் நியமித்தல் வேண்டும்;

(ஆ) இணக்க அலுவலருக்கு உதவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களை நியமித்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் நிறுவனத்தின் கடமைகளும், பணிகளும், கடப்பாடுகளும் தகுந்தமுறையில் புரியப்பட்டு

நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதிய வேறு வளங்களை வழங்குதலும் வேண்டும்;

(இ) பின்வருவனவற்றுக்கான நடவடிக்கை முறைகளையும் முறைமையையும் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்:-

(i) பணம்தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பவற்றை அடையாளங் காணுதலும், விளங்கிக் கொள்ளுதலும், மதிப்பீடுசெய்தலும் மற்றும் ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையொன்றை ஏற்புடையதாக்கி அந்த ஆபத்துக்களை முகாமை செய்வதற்கும், தணிப்பதற்குமான கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் உருவாக்குதல்;

(ii) பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பவற்றுக்கு எதிராக இலக்கிடப்பட்ட நிதிசார் தடைவிதிப்புக்களை நடைமுறைப்படுத்துதல்;

(iii) பிரிவு 2 இன்கீழான வாடிக்கையாளரின் உரிய விழிப்புக்கவனத் தேவைப் பாடுகளை நடைமுறைப் படுத்துதல்;

(iv) பிரிவு 4 இன்கீழான பதிவேடு வைத்திருத்தல் மற்றும் தக்கவைத்திருத்தல் தேவைப்பாடுகளுக்கான நடவடிக்கை முறைகளை நடைமுறைப்படுத்துதல்;

(v) பிரிவு 5 இன்கீழான வாடிக்கையாளர்களின் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உரிய விழிப்புக் கவனச் செய்முறையையும் கொடுக்கல் வாங்கல்களின் துனித்தாராய் வையும் நடைமுறைப் படுத்துதல்;

(vi) பிரிவுகள் 6,7,8 மற்றும் 22 இன்கீழ் தேவைப்படுத் தப்பட்ட அறிக்கையிடும் தேவைப்பாடுகளின் செய் முறையை நடைமுறைப் படுத்துதல்;

(vii) ஏற்புடையற்பாலவிடத்து, 15 ஆம் பிரிவுக்கும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி அல்லது பணிப்புக்கும் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துதல்;

(viii) இச் சட்டத்தினாலும் அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புக்கள், சுற்றறிக்கை கள் மற்றும் வழிகாட்டு

நெறிகளினாலும் பணம் தூய்தாக்கலையும், பயங்கரவாதி நிதியளித்தலையும், பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலையும் முறியடித்தல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தினாலும் தேவைப்படுத்தப்பட்டவாறு நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்ட வழிமுறைகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் பற்றி அதன் அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும், முகவர்களுக்கும் அறியத் தருதல்;

(ix) எல்லா ஆட்களையும், ஊழியர்களாக அல்லது முகவர்களாக அவர்களை வேலைக்கமர்த்த முன்னர் பரிசோதனை செய்தல்; அத்துடன்

(x) இச் சட்டத்தினாலும் அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புக்கள், மற்றும் வழிகாட்டுநெறிகளினாலும் நிறுவனங்கள்மீது விதிக்கப்பட்ட வேறு வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துதல்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காக அதன் நடவடிக்கைமுறைகளையும் முறைமை

களையும் பரீட்சிப்பதற்கு ஒரு கணக்காய்வுப் பணியகத்தைத் தாபித்தல் வேண்டும்; அத்துடன்

(உ) சந்தேகத்துக்கிடமான கொடுக்கல் வாங்கல்களை இனங் காண்பதற்கு அதன் அலுவலர் களுக்கும், ஊழியர்களுக்கும், முகவர்களுக்கும் பயிற்சி யளித்தல்.";

முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் II அ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் பாகம் II அ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும்:-

**"பாகம் II அ**
**நிதிசார் உளவறிதற் கூறு**

"நிதிசார் உளவறிதற் கூறைத் தாபித்தல்

**14.அ.**(1)இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கை மத்திய வங்கியினுள் ஒரு நிதிசார் உளவறிதற் கூறு தாபிக்கப்படுதல் வேண்டும்; இது (இச்சட்டத்தில் "நிதிசார் உளவறிதற் கூறு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையின் நிதிசார் உளவறிதற் கூறு எனவழைக்கப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்தாறாம் ஆண்டு மாச்சு 23 ஆந்தேதிய 1437/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் பெயர்குறிக்கப்பட்டதும், இப்பிரிவு தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பணியாற்றுகின்றதுமான நிதிசார் உளவறிதற் கூறு, எல்லா நோக்கங்களுக்காகவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) நிதிசார் உளவறிதற் கூறு, இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் தொழிற்பாட்டுரீதியில் சுயாதீனமானதாகவும் தன்னாட்சி யுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, "தொழிற்பாட்டு ரீதியில் சுயாதீனமான தாகவும் தன்னாட்சியுள்ளதாகவும்" என்பது, பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் என்று பொருளாகும்:-

(அ) அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் இச்சட்டத்தின் கீழ் நிதிசார் உளவறிதல் தொடர்பாகக் குறிப்பிட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும், கோருவதற்கும், அனுப்பிவைப்பதற்கும் தன்னாட்சியுள்ள முடிபுகளை எடுப்பதற்குமான அதிகாரத்தையும் ஆற்றலையும் கொண்டிருத்தல்;

(ஆ) தகவல்களைப் பரிமாறுதல் பற்றி வேறு உள்நாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரிகளுடன் அல்லது வெளிநாட்டிலுள்ள நேரொத்தவர்களுடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கு அல்லது சுயாதீனமாக ஈடுபடுவதற்கு இயலுமாந்தன்மையைக் கொண்டிருத்தல்;

(இ) இலங்கை மத்திய வங்கியின் மையப் பணிகளிலிருந்து வித்தியாசப்படும் தனிவேறான மையப் பணிகளைக் கொண்டிருத்தல்; அத்துடன்

(ஈ) இவ்வுட்பிரிவின் (அ) முதல் (இ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அதன் தொழிற்பாட்டுரீதியிலான சுயாதீனத்தை விட்டுக் கொடுக்கக்கூடிய ஏதேனும் தகாத செல்வாக்கு அல்லது தலையீட்டிலிருந்து சுதந்திரமாக, ஒரு தனிப்பட்ட அல்லது வழக்கமுறையான அடிப்படையில், அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், ஈடுபடுத்துவதற்குமான இயலுமாந் தன்மையைக் கொண்டிருத்தல்.

நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரும் பணியாட் டொகுதியினரும்

**14.ஆ.**(1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியின் ஆளும் சபை, நிதிசார் உளவறிதற் கூறின் தலைவராக மத்திய வங்கியின் தரம் IV என்ற தரத்திலுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள பதவிநிலை அலுவலரொருவராக இருக்கவேண்டிய அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, "நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர்" என்னும் பதம், நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் என்ற தன்மையில் செயலாற்றுகின்ற அலுவலரொருவரையும் உள்ளடக்குதல் வேண்டும்

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, நிதிசார் உளவறிதற் கூறில் சேவையாற்றுவதற்கு ஆளும்

சபையினால் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் அலுவலர்களும் ஏனைய ஊழியர்களும் நிதிசார் உளவறிதற் கூறின் பணியாட்டொகுதியினராகக் கருதப்படுதல் வேண்டும்.

நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினது தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

**14.இ.**(1) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதிசார் உளவறிதற் கூறுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் மற்றும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர், எழுத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் மட்டுமே பிரயோகிக்கப்பட வேண்டிய பின்வரும் தத்துவங்களைத் தவிர, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப் பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் நிதிசார் உளவறிதற் கூறின் எவரேனும் பணியாட்டொகுதி அலுவலருக்குக் கையளிக்கலாம்:-

(அ) நிறுவனங்களுக்கு ஏற்புடையற் பாலனவான அல்லது இச்சட்டத் தினால் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ஆ) சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கை

யொன்றின் அடிப்படையில், ஒரு கொடுக்கல்வாங்கலை அல்லது ஒரு கணக்கை இடைநிறுத்துதல்; அத்துடன்

(இ) 19 ஆம் பிரிவின் கீழான நிருவாகத் தடை விதிப்புக்களைச் சுமத்துதல்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்த அலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலரொருவர், அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் அத்தகைய அலுவலருக்கு நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் எழுத்தில் காலத்துக்குக் காலம் வழங்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்த அலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலரொருவர், அத்தகைய கையளிப்பு நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் இல்லாதொழிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அவ்வாறு கையளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின், கடமையின் அல்லது பணியின் இடைநேர்விளைவான எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(5) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர், (2) ஆம் உட்பிரிவின்கீழான அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் மற்றும் பணியாட் தொகுதியின் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**14.ஈ.** (1) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரும், பணியாட் தொகுதியினரும் இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பில் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "திரட்டுதல் வேண்டும் அல்லது திரட்டுமாறு நிதிசார்ந்த நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபையைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது பெற்றுக்கொள்ளும்படி நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரியைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மையிடமிருந்தும் அத்துடன் மேற்பார்வை முகவராண்மையிடமிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்ட வலுவுறுத்துகை முகவராண்மை யிடமிருந்தும், மேற்பார்வை அதிகாரியிட மிருந்தும் அல்லது இயைபானவரென நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் கருதக்கூடிய எவரேனும் ஆளிடமிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஈஅ) தொழிற்பாட்டு ரீதியிலான மற்றும் மூலோபாயப் பகுப்பாய்வை நடாத்துதல் வேண்டும்;";

(ஈ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "பதினெட்டாம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறு எல்லா நிறுவனங்களினதும் பரிசோதனையை மேற்கொள்ளுதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினெட்டாம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறு எல்லா நிறுவனங்களினதும் பரிசோதனையை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பரிசோதனைகளின் முடிவுகளை அத்தகைய நிறுவனத்தின் மேற்பார்வை, ஒழுங்குபடுத்துகை, உரிமமளித்தல் அல்லது பதிவுசெய்தல் அதிகாரியுடன் பகிர்ந்துகொள்ளலாம்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(உ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(உஅ) 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் ஆபத்து அடிப்படையிலான மேற் பார்வையை நிறைவேற்றலாம்;";

(ஊ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஊஅ) அது பெறுகின்ற ஏதேனும் அறிக்கையிலிருந்து அல்லது

தகவலிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் கருமத்தை அல்லது தகவலை தோதான மேற்பார்வை அதிகாரிக்கு அல்லது சுய ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு ஆற்றுப்படுத்தலாம்;

(ஊஆ) கோரிக்கையின்மேல், அது பெறுகின்ற அல்லது அதன் உடைமையிலுள்ள ஏதேனும் அறிக்கையிலிருந்து அல்லது தகவலிலிருந்து பெறப்பட்ட தகவலை அல்லது நிதிசார் உளவறிதலை அல்லது அவையிரண்டையும், பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல், பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் அல்லது ஏதேனும் இணைந்த சட்டமுறையற்ற செயற்பாடு என்பன தொடர்பான புலனாய்வுகளை நடாத்துகின்ற ஏதேனும் சட்ட வலுவுறுத்துகை முகவராண்மைக்கு பரப்பலாம்;";

(எ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "மேலும் செயற்பாடு" மற்றும் "அழித்துவிடுதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே, "சந்தேகத்துக்கிடமான மேலதிகச் செயற்பாடு" மற்றும் "அழித்துவிடலாம்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஏ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "அறிவுறுத்துதல் வேண்டும் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு நிறுவனத்தை அறிவுறுத்தலாம் அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஐ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஒ) 29அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விதிகளுக்கும், 29ஆ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புக்கள், சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டுநெறிகள் என்பவற்றுக்கும் அமைய, வாடிக்கையாளரை அடையாளங்காணுதல், பதிவேடு வைத்திருத்தல், அறிக்கையிடும் கடப்பாடுகள், சந்தேகத்துக்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அடையாளங் காணுதல், கொடுக்கல் வாங்கல்களை இடைநிறுத்துதல், ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறை மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை பயனுற நடைமுறைப்படுத்துவதற்கான அத்தகைய வேறு கருமங்கள் என்பன தொடர்பாக நிறுவனங்களுக்குப் பணிப்புக்களை, சுற்றறிக்கைகளை அல்லது வழிகாட்டுநெறிகளை வழங்குவதற்கு வசதியளிக்கலாம் அல்லது வழங்குவதற்கு நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரத்தைக் கொண்டிருக்கலாம்;";

(ஒ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(கஅ) பணம்தூய்தாக்கலையும், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலையும், பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலையும் கண்டுபிடித்தலிலும் தடுத்தலிலும் மற்றும் நிதிசார் நடவடிக்கைச் செயலணியினால் விதித்துரைக்கப்பட்ட வேறு துறைகளிலும் நிதிசார் உளவறிதற்

கூறின் பணியாட்டொகுதியினரது அறிவையும் திறன்களையும் அதிகரிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறாக அவர்களுக்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தலாம், வழங்கலாம் அல்லது வசதிப்படுத்தலாம்;";

(ஓ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ச) பணம் தூய்தாக்கல், பயங்கர வாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்ற துறையிலும் மற்றும் பணம் தூய்தாக்கலை, பயங்கர வாதத்துக்கு நிதியளித்தலை அத்துடன் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலைக் கண்டு பிடிப்பதிலும், தடுப்பதிலும், தடைசெய்வதிலும் சீராக்கப்பட்ட வழிகளும் பற்றி ஆபத்துக்கள், போக்குகள். முறைகள், அபிவிருத்திகள் மற்றும் வகைமையியல்கள் என்பன தொடர்பில் ஆராய்ச்சியையும், பரிசீலனைகளையும் அல்லது மதிப்பீடுகளையும் நடாத்தலாம்;";

(ஔ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(சஅ) ஏதேனும் ஆராய்ச்சிக்காக, பரிசீலனைக்காக அல்லது மதிப்பீட்டுக்காக நிதிசார்

உளவறிதற் கூறு இயைபானதெனக் கருதுகின்ற ஏதேனும் நிறுவனத்திடமிருந்து ஏதேனும் தகவலைப் பெற்றுக்கொள்ளலாம்;";

(க) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில், "பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ங) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஞஅ) பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பன தொடர்பான கருமங்களைப் பற்றிச் சட்டவலுவுறுத்துகை முகவர் நிலையங்கள், தகுதிவாய்ந்த அதிகாரிகள் அல்லது குற்றவழக்குத்தொடுநர்களுக்குப் பயிற்சி வழங்கலாம்;";

(ச) அவ்வுட்பிரிவுக்கான (ட) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ட) 16 ஆம், மற்றும் 17 ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ளவாறு,

ஏதேனும் அறிக்கை, அத்தகைய அறிக்கையிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் தகவலின் அல்லது அது பெறுகின்ற வேறேதேனும் தகவலின் பகுப்பாய்வினது அல்லது மதிப்பீட்டினது அடிப்படையில் அத்தகைய அறிக்கை அல்லது தகவல் சட்டமுறையற்றவொரு செயற்பாடாக அமைகின்ற ஏதேனும் செயலை, அல்லது பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்ற தவறைப் புலனாய்வு செய்வதற்கு அல்லது அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அத்தகைய அறிக்கை அல்லது தகவல் இயைபானதாக இருக்குமெனச் சந்தேகிப்பதற்கு நிதிசார் உளவறிதற் கூறு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருப்பின் அத்தகைய அறிக்கையை அல்லது தகவலை அல்லது 18 ஆம் அல்லது 23 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் பரிசோதனையின் அடிப்படையிலான ஏதேனும் மேற்பார்வைசார் கண்டறிதலை வெளிவிடலாம் அல்லது பரிமாறலாம்;";

(ஞ) அவ்வுட்பிரிவுக்கான (ண) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ண) பணம் தூய்தாக்கலையும், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலையும் அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை

பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலையும் முறியடித்தல் தொடர்பிலான தகவல் பரிமாற்றம், கூட்டு மேற்பார்வை மற்றும் வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பாக ஏதேனும் உள் நாட்டின் அல்லது சர்வதேச அரசாங்க நிறுவனத்துடன் அல்லது முகவராண்மையுடன் அல்லது வேறு உருவகத்துடன் ஏதேனும் உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்து கொள்ளலாம்"; அத்துடன்

(ட) அவ்வுட்பிரிவுக்கான (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(த) அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதான நிதிசார் உளவறிதற்கூறின் செயற்றிறன் பற்றிய வருடாந்த அறிக்கையை ஆண்டிற்குள் வெளியிடுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) "கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று-", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுக்கல்வாங்கல், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் அல்லது எவரேனும் ஆளினால் பேணப்படும் கொடுக்கல்வாங்கலுடன் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலுடன் இணைந்த கணக்கொன்று-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின்

கீழ்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பணம் தூய்தாக்கலைத் தடை செய்யும் சட்டத்தின் கீழ்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் “ஆயத்தமாக இருக்கலாம்,” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஆயத்தமாக இருக்கலாம்; அல்லது” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(ஈ) பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்னும் தவறைப் புரிவதற்கு சம் பந்தப்படுத்தப்பட்டிருக்கலாம்,”;

(உ) “நிதிசார் உளவறிதற் கூறினால் தீர்மானிக்கப்படவேண்டிய” என்னும் சொற்களிலிருந்து “அது நிறுவனத்தைப் பணிக்கலாம்” என்னும் எல்லா சொற்களுக்கும் பதிலாக “பதினான்கு வேலை நாட்களுக்கு மேற்படாதிருக்ககூடிய நிதிசார் உளவறிதற் கூறினால் தீர்மானிக்கப்பட வேண்டிய காலப்பகுதியொன்றுக்கு அக் கொடுக்கல் வாங்கலினால் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலினால் அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கலுடன் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலுடன் இணைந்த கணக்கொன்றினால் அல்லது பிற கொடுக்கல் வாங்கலினால் பாதிக்கப்பட்ட நிதிகள் தொடர்பில் கொடுக்கல்வாங்கலை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை அல்லது ஏதேனும் பிற

கொடுக்கல்வாங்கலை இடைநிறுத்த அல்லது தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாமென்று எழுத்தினால் அல்லது இருபத்துநான்கு மணித்தியாலங்களுள் எழுத்தில் உறுதிப்படுத்தப்படவேண்டிய தொலைபேசி அழைப்பினால் அது நிறுவனத்தைப் பணிக்கலாம்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:-

(ஊ) அவ்வுட்பிரிவின் (i) ஆம் உட்பந்தியில், "கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய கொடுக்கல்வாங்கல், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல், எல்லா கொடுக்கல்வாங்கல் அல்லது கணக்கு தொடர்பாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(எ) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியில், "அதற்கு மதியுரை வழங்குவதற்கு," என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"அதற்கு மதியுரை வழங்குவதற்கு:"; அத்துடன்

(ஏ) அவ்வுட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகத்தை சேர்ப்பதன் மூலமும்:-

"ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய கணக்கிற்கு திரட்டப்பட்ட எவையேனும் பற்றுச்சீட்டுக்கள் அத்தகைய கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஈட்டப்பட்ட வட்டிக்கு ஏதேனும் வரியிருப்பின் அத்தகைய கணக்கிலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "விண்ணப்பமொன்றைச் செய்யலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக:-

"விண்ணப்பமொன்றைச் செய்யலாமென்பதுடன் அவை தொடர்பான வழக்குநடவடிக்கைகள் இரகசியமாக நடைபெறுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், கொடுக்கல்வாங்கல், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கலுடன் இணைந்த கணக்கொன்று அல்லது இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று தொடர்பில் எவரேனும் ஆளினால் பேணப்பட்ட எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பில் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் போன்ற தவறுகளுக்கு குற்றப்பகர்வு ஒன்று கோப்பிடப்படுமிடத்து, அத்தகைய கட்டளை பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றத்தினால் வெற்றானதாக்கப்பட்டாலொழிய, அத்தகைய தவறு தொடர்பில் விசாரணை முடியும்வரை அல்லது அத்தகைய தவறுக்காக குற்றத்தீர்ப்பளிப்புக்கெதிராக மேன்முறையீடு ஒன்று விரும்பப்படுமிடத்து மற்றும் மேன்முறையீட்டு தீர்மானம்வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"நிதிசார் உளவறிதற் கூறின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 16 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"வெளிநாட்டு நிறுவனங் களுக்கும் முகவராண்மை களுக்கும் தகவல்களை வெளிவிடுதல்

**16.** நிதிசார் உளவறிதற் கூறு –

(அ) வெளிநாட்டு அரசின் அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஒத்த வெளிநாட்டு அரசொன்றின் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பின் நிறுவனம் அல்லது குழுவுடன் அல்லது வேறு நிறுவனத்துடன் அல்லது முகவராண்மையுடன்;

(ஆ) சட்டத்தை வலுவுக்கிடும் வெளி நாட்டு முகவராண்மையுடன் அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையுடன்; அல்லது

(இ) நிதிசார் உளவறிதற் கூறின் எக்மன்ட் குழுவின் உறுப்பினர் ஒருவருடன் அல்லது அதனையொத்த ஒழுங்கேற்பாடுகளுடன்,

அத்தகைய அறிக்கையை அல்லது தகவலை, வெளியிடுதல் அல்லது பரிமாறல் தொடர்பாக 17 ஆம் பிரிவின் கீழ் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை அல்லது ஒழுங்கேற்பாடு தரப்பட்டுள்ளவாறான அத்தகைய நியதிகள், மற்றும் நிபந்தனைகள் மீது ஏதேனும் அறிக்கை அல்லது தகவலை வெளியிடலாம் அல்லது பரிமாறலாம். ".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(4) இப்பிரிவிலுள்ள எதுவும், நிதிசார் உளவறிதற் கூறானது, ஒழுங்குபடுத்தல் இணங்கியொழுகாமை மற்றும் வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையுடனான மேற்பார்வை கண்டுப்பிடிப்புக்கள் வெளிநாட்டு ஒழுங்குபடுத்தல் குழுக்களுடன் மற்றும் பரஸ்பர அடிப்படையில் பகிர்வதை தடை செய்தலாகாது.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "நிதிசார் உளவறிதற் கூறு அல்லது அதனால் அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நிதிசார் உளவறிதற் கூறின் அலுவலர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஊழியர் அல்லது நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகள் என்பவற்றுடன் இணங்கியொழுகப்படுவதனை

உறுதிப்படுத்துவதற்கு இயைபான பதிவேடுகள் உள்ளன என நியாயமான ஏதுக்களின்மீது அத்தகைய அலுவலர், ஏனைய ஊழியர் அல்லது வேறு ஆள் நம்புகின்ற எவையேனும் வளவுகளில் ஏதேனும் நியாயமான நேரத்தில் உட்புகலாம்;";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) "நிதிசார் உளவறிதற் கூறிற்கு அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நிதிசார் உளவறிதற் கூறின் பணியாட்தொகுதியினரின் அலுவலர் அல்லது ஏனைய ஊழியர் அல்லது நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) "இச்சட்டத்தின் பாகங்கள் I, II மற்றும் III என்பவற்றின் அல்லது சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நிர்வாகம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின், விதிகளின், கட்டளைகளின் அல்லது பணிப்புகளின் நிர்வாகம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்துடன் இணங்கியொழுகாமைக்கான அல்லது சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் தவறொன்றுக்கான புலனாய்வுக்கு இயைபானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்துடன் இணங்கியொழுகாமைக்கான அல்லது பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கு

நிதியளித்தல் அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் போன்ற தவறொன்றுக்கான அல்லது சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் தவறொன்றுக்கான புலனாய்வுக்கு இயைபானது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"புத்தகங்கள், பதிவேடுகள் முதலியவற்றை பரிசீலனை செய்வதற்கு நிதிசார் உளவறிதற் கூறுக்குள்ள தத்துவம்.,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"இணங்கியொழுகுதலை வலுவுக்கிடுவதற்கென நிருவாகத் தடை விதிப்பை விதித்தல்

19.(1) ஆளொருவர் –

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, விதியை அல்லது கட்டளையை ;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளுக்கு விதிக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான அறிவித்தலை, பணிப்புரையை அல்லது வேறு ஏதேனும் தேவைப்பாட்டை,

மீறுமிடத்து அல்லது அதனோடு இணங்கியொழுகத் தவறுமிடத்து, மீறுகை அல்லது தவறுகை என்பவற்றின் தன்மையையும் பாரதூரத்தையும் மற்றும் இயைபானவிடத்து, அத்தகைய ஆளினால் மீறுகையை அல்லது தவறுகையை சீராக்க எடுக்கப்பட்ட அடுத்துறும் நடவடிக்கைகளையும் கருத்திற் கொண்டு, நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரால் விதிக்கப்படுகின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிருவாகத் தடைவிதிப்புக்கு பொறுப்பாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு நிர்வாக தடை விதிப்பானது –

(அ) எழுத்திலான எச்சரிக் கையொன்றாக;

(ஆ) விதிக்கப்பட்ட காலப் பகுதியினுள் பரிகார நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரும் கட்டளையொன்றாக;

(இ) பகிரங்க கூற்றொன்றாக;

(ஈ) இல்லாதொழித்தல் மற்றும் விலக்கல் கட்டளையொன்றாக;

(உ) பணத்திலான தண்டமொன்றாக;

(ஊ) விடயத்திற்கேற்ப-

(i) ஒரு எழுத்திலான எச்சரிக்கையை வெளி யிடுதல்;

(ii) ஒரு நிறுவனமொன்றினால் பொறுப்பு மேற்கொள்ளப்படுகின்ற தொழில் அல்லது உயர் தொழிலின் உரிமத்தை இடைநிறுத்தல் அல்லது மட்டுப்படுத்தல் அல்லது தொடர்வதை தடை செய்தல்; அல்லது

(iii) ஒரு நிறுவனத்தின் உரிமத்தை இல்லா தொழித்தல்; அல்லது

(iv) மேற்பார்வை செய்யும், ஒழுங்குபடுத்தும், சுய ஒழுங்குபடுத்தும் உரிமமளிக்கும் அல்லது பதிவு செய்யும் அதிகாரசபைக்கு இயைபான துறையினுள் ஊழியம், வர்த்தகம், தொழில் அல்லது உயர்தொழிலில் ஈடுபடும் ஆளொருவருக்கு கால அளவொன்றை அல்லது மட்டுப்பாடொன்றை விதித்தலானது,

ஒரு நிறுவனத்தின் மேற்பார்வை செய்தல், ஒழுங்குபடுத்தல், சுய ஒழுங்குபடுத்தல், உரிமமளித்தல் அல்லது பதிவு செய்யும் அதிகார சபைக்கான விதந்துரைத்தலாக, அத்தகைய நிறுவனத்தை ஒழுங்குபடுத்த அல்லது மேற்பார்வை செய்ய ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்தின் நியதிகளின் படி அனுமதிக்கப்படக் கூடியவாறு இருக்கலாம்.

(3)(அ) இப்பிரிவின் கீழ் ஆளொருவருக்கு ஏதேனும் முன்னைய சந்தர்ப்பமொன்றில்

அல்லது மீறுகை அல்லது தவறுகை நிகழ்வொன்றில் விதிக்கப்படும் பணத்தினாலான தண்டப்பணமானது நூறு மில்லியன் ரூபா பணத்தொகையை விஞ்சுதலாகாது.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளொருவரால் ஏதேனும் தொடர்ச்சியான மீறுகை அல்லது தவறுகை செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய ஆள் இருநூறு மில்லியன் ரூபா பணத்தொகையை விஞ்சாத தண்டப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(4) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரானவர், இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட பணத்தினாலான தண்டப்பணத்தைச் சேகரிப்பதற்கு பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் பணத்தினாலான தண்டப்பணமொன்றுக்கு ஆளாகும் ஆளொருவர் அத்தகைய பணத்தினாலான தண்டப்பணத்தை செலுத்தத் தவறுவாராயின், நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரானவர் பணத்தினாலான தண்டப்பணத்தின் கொடுப்பனவைத் தேவைப்படுத்தும் கட்டளையொன்றுக்காக கொழும்பில் நடைபெறும் மேல்மாகாண மேல் நீதிமன்றத்திற்கு மறு திறத்தவரில்லாத விண்ணப்பமொன்றை செய்யலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதன் மீது அத்தகைய தொகையானது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற் போன்ற அதே முறையில் அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழ் நிர்வாகத் தடைவிதிப்பொன்று விதிக்கப்படுதலானது, அத்தகைய நிறுவனத்தை ஒழுங்குபடுத்துவதற்கு மேற்பார்வை செய்வதற்கு எதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்தின் அல்லது விதிகளின் நியதிகளின்படி அனுமதிக்கப்படக்கூடியவாறு தொழில் அல்லது உயர்தொழிலொன்றை கொண்டு நடாத்துவதினின்று அத்தகைய நிறுவனத்தை இடைநிறுத்தல் அல்லது தொழில் அல்லது உயர் உயர்தொழிலொன்றை கொண்டு நடாத்துவதற்கு அளிக்கப்பட்ட உரிமமொன்றை அல்லது அதிகாரத்தை இல்லாதொழித்தல் உட்பட, ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்படாமல் ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது ஒழுக்காற்று வழிமுறைகளை எடுப்பதினின்று நிறுவனமொன்றின் மேற்பார்வை, ஒழுங்குபடுத்தும், சுய ஒழுங்குபடுத்தும் உரிமமளிக்கும் அல்லது பதிவு செய்யும் அதிகாரசபையொன்றை தடை செய்தலாகாது.

(7) இப்பிரிவின் கீழ் ஆட்கள் குழுவொன்றின் மீது பணத்தினாலான தண்டப்பணமொன்று விதிக்கப்படுமிடத்து–

(அ) ஆட்கள்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், பணத்தினாலான தண்டப்பணம் விதிக்கப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது அதனையொத்த வேறு அலுவலர் ஒருவராக இருந்த ஒவ்வோராளும்; அல்லது

(ஆ) ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இல்லாதவிடத்து, அத்தகைய பணத்தினாலான தண்டப்பணம் விதிக்கப்பட்ட நேரத்தில் அக்குழுவின் தவிசாளராக, முகாமையாளராக, செயலாளராக, பங்காளராக, உறுப்பினராக அல்லது அதனையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும்,

தாம் மீறுகை அல்லது தவறுகை பற்றி அறிந்திருக்கவில்லையென அல்லது இச்சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுடன் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன், விதியுடன் கட்டளையுடன், நிபந்தனையுடன், மட்டுப்பாடுகளுடன், அறிவித்தலுடன், பணிப்புரையுடன் அல்லது ஏனைய பணிப்புரையுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்குத் தாம் எல்லா உரிய விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தாலன்றி, அத்தகைய பணத்தினாலான தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(8) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பரிகார நடவடிக்கையுடன் அல்லது இல்லாதொழித்தல் மற்றும் விலக்கல் கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரானவர், கொழும்பில் நடைபெறும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்வதன்மீதும் அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு நியாயமான காரணமின்றி முழுமையாக அல்லது பகுதியளவில் இணங்கியொழுகத் தவறியுள்ளாரென நீதிமன்றத்தை

திருப்திப்படுத்துவதன் மீதும் அத்தகைய கடப்பாட்டுடன் இணங்கியொழுகுவதனை வலுவுக்கிடுவதற்கு அவசியமானதென நீதிமன்றம் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளுக்கமைந்த கட்டளையொன்றை அத்தகைய எவரேனும் ஆளுக்கும் அத்தகைய ஆளின் அல்லது எல்லா அலுவலர்களுக்கும் அல்லது ஊழியர்களுக்கும் எதிராகப் பெறலாம்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பணிப்பாளர், அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தலைவர், அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள் பின்வருவன தவிர, இச்சட்டத்தின்கீழ் அவ் ஆளுக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது குறித்தளிக்கப்பட்ட பணிகளை புரிகையில் அத்தகைய ஆள் பெற்றுள்ள அல்லது அத்தகைய ஆளின் அறிவுக்கு அறியவந்திருக்கும் ஏதேனும் தகவலை அல்லது கருமத்தை வெளிவிடுதலாகாது -

(அ) அத்தகைய கடமைகளை நிறைவேற்றும் அல்லது

அத்தகைய பணிகளைப் புரியும் நோக்கத்துக்காக;

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்வதற்கு சட்டமுறையாக தேவைப்படும் போது;

(இ) இச்சட்டத்தின் அல்லது அது தொடர்பிலான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியுள்ள ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதலை பெறுவதற்கு அல்லது அதனை தட்டிக்கழிப்பதனைக் கண்டுபிடிப்பதற்கு;

(ஈ) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தை மற்றும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ; அல்லது

(உ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் புதிய பாகம் III அ வினை உட்புகுத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் பாகம் III அ வாக பயனுறுதலும் வேண்டும்:-

## "பாகம் III அ

## பணம் தூய்தாக்கலை எதிர்ப்பதற்காகவும், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளிப்பதையும் எதிர்ப்பதற்காக தேசியக் குழு ஒன்றினைத் தாபித்தல்

"பணம் தூய்தாக்கலை எதிர்ப்பதற்காகவும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளிப்பதையும் எதிர்ப்பதற்காகவும் தேசியக் குழு ஒன்றினைத் தாபித்தல்

**21அ.** இலங்கையில் பணம் தூய்தாக்கலை எதிர்த்தல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலையும் எதிர்த்தல் தொடர்பான தேசியக் கொள்கையை ஒருங்கிணைத்து மேற்பார்வையிடவும் அத்தகைய தேசியக் கொள்கையை வகுத்தமைத்தலில் அவசியமான வழிகாட்டுநெறிகளை வழங்கவும் (இச்சட்டத்தில் தேசியக் குழு எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணம் தூய்தாக்கலை எதிர்க்கவும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளிப்பதையும் எதிர்ப்பதற்குமான ஒரு தேசியக் குழுவானது தாபிக்கப்படுதல் வேண்டும்.

தேசியக் குழுவின் அமைப்பு

**21ஆ.**(1) தேசியக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மத்திய வங்கியின் ஆளுநர்;

(ஆ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(இ) வெளிநாட்டு அலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஈ) நீதி என்ற விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(உ) பாதுகாப்பு என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஊ) பொது பாதுகாப்பு அல்லது உள்நாட்டுப் பாதுகாப்பு என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(எ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(ஏ) பொலிஸ் அத்தியட்சகர் தலைமை யதிபதி; அத்துடன்

(ஐ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி.

(2) தேசியக் குழுவின் கூட்டங்களுக்கு –

(அ) எவரேனும் பகிரங்க அலுவலர்; அல்லது

(ஆ) தேசியக் குழுவின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமாகக் கருதப்படக்கூடிய நிபுணத்துவம் அல்லது அறிவை கொண்டுள்ள வேறு எவரேனும் ஆளொருவரை,

தேசிய குழுவானது அழைக்கலாம்.

(3) தேசியக் குழுவின் கூட்டங்களில் மத்திய வங்கியினுடைய எல்லா பிரதி ஆளுநர்களும் பங்கேற்றல் வேண்டும்.

(4) தேசியக் குழுவின் செயலாளராக நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரானவர் செயலாற்றுதல் வேண்டும்.

தேசியக் குழுவின் தவிசாளர்

**21இ.**(1) மத்திய வங்கியின் ஆளுநர் தேசியக் குழுவின் தவிசாளராதல் வேண்டும்.

(2) தேசியக் குழுவிற்கு தவிசாளரொருவர் இல்லாதவிடத்து, அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தேசியக் குழுவின் தவிசாளராக செயலாற்றுதல் வேண்டும்.

தேசியக் குழுவின் கூட்டங்கள்

**21ஈ.** தேசியக் குழுவின் கூட்டமானது, குறைந்தது காலாண்டுக்கொருமுறை கூட்டப்படுதல் வேண்டும். ஏதேனும் விசேட கூட்டமானது தவிசாளரால் அவரினது தற்துணிபில் அல்லது உறுப்பினரொருவரின் எழுத்திலான வேண்டுகோளில் கூட்டப்படலாம்.

தேசியக் குழுவின் கடமைகள் மற்றும் பணிகள்

**21உ.** தேசியக் குழுவானது, பணம் தூய்தாக்கலை எதிர்த்தல், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளிப்பதையும் எதிர்ப்பதற்கான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றலும் புரிதலும் வேண்டும்:-

(அ) இலங்கையில், பணம் தூய்தாக் கலின், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலின் மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலின் இடர்கள் அடையாளங் காணப்படுதலையும் வினைத் திறனாக மதிப்பீடுசெய்யப் படுதலையும் அத்துடன் அத்தகைய

இடர்கள் பற்றிய மதிப்பீடுகள் நாளதுவரையாக்கப்படுதலையும் உறுதிப்படுத்துதல்;

(ஆ) எல்லா இயைபான தகுதிவாய்ந்த அதிகாரசபைகளுக்கும், சுய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் இடர்பற்றிய மதிப்பீடுகளின் பெறுபேற்றின் மீதான தகவல்கள் வழங்கப்படுதலை உறுதிப்படுத்துதல்;

(இ) அடையாளங் காணப்பட்ட இடர்களுக்கிணங்க வகுத்தமைக்கப்பட்ட பணம் தூய்தாக்கலை எதிர்ப்பதற்காகவும், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்காகவும் நிதியளித்தலை எதிர்ப்பதற்காகவும் தேசியக் கொள்கையானது கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றதனை உறுதிசெய்வதற்கு அமைச்சரினூடாக அமைச்சரவைக்கு உதவுதல் அல்லது மதியுரையளித்தல்;

(ஈ) இயைபான அக்கறை கொண்டோரால் அத்தகைய தேசியக் கொள்கையானது நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தல்;

(உ) நிதி நடவடிக்கைகளுக்கான பணிக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு இசைவாக

பணம் தூய்தாக்கலின், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலின் இடர்களைக் கட்டுப்படுத்தவும் தணிக்கவும் அத்தகைய தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக செயல்நுணுக்கங்களை விருத்தி செய்ய மதியுரையளித்தல் மற்றும் வழிகாட்டுதல்;

(ஊ) அத்தகைய தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கங்களையும் பயனுற நடைமுறைப்படுத்த இயைபான அக்கறை கொண்டோரிடையே ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தல்;

(எ) பணம் தூய்தாக்கலை முறியடித்தல், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவு தரும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலை எதிர்த்தல் தொடர்பான தேசியக் கொள்கையையும் தொடர்பட்ட செயல்நுணுக்கங்களையும் நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் அவசியமாயின் அத்தகைய விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு காலவரையறையுடன் பொதுவான அல்லது குறிப்பான விதப்புரைகளை செய்தல்;

(ஏ) பணம் தூய்தாக்கலை முறியடித்தல், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை

பெருமளவில் தயாரிப்பதற்கு பெருக்கத்திற்கு நிதியளிப்பதையும் எதிர்த்தல் தொடர்பான தேசியக் கொள்கை, செயல்நுணுக்கங்கள், அண்மைக்கால போக்குகள், வகைப்பாடுகள் மற்றும் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் என்பவற்றின் அடிப்படையின் மீது தேசியக் குழுவினுடைய விதப்புரைகளையும் முடிபுகளையும் நடைமுறைப் படுத்துவதற்கு ஏதேனும் பொதுவான குறிப்பான பணுப்புகளை ஏதேனும் ஒழுங்குபடுத்தலும் அதிகார சபைக்கு அல்லது அக்கறை கொண்டோருக்கு வழங்குதல் அத்துடன் அவசியமாயின், அத்தகைய பணிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு கால வரையறைகளை குறித்துரைத்தல்;

(ஐ) பணம் தூய்தாக்கலை முறியடிக்கவும், பயங்கர வாதத்திற்கு நிதியளிப்பதையும் பேரழிவு தரும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளிப்பதையும் எதிர்க்கவும் படக்கூடியதான நடவடிக்கைகள், கொள்கைகள் அல்லது செயல்நுணுக்கங்கள் தொடர்பில் அமைச்சரினூடாக அமைச் சரவைக்கு விதப்புரைகளை செய்தல்;

(ஒ) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள தேசியக் குழுவினுடைய கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் உதவுவதற்காக தேசியக் குழுவினுடைய உறுப்பினர்கள் அல்லது

ஏதேனும் பகிரங்க அலுவலர் அல்லது எவரொருவரின் நிபுணத்துவம் அல்லது அறிவு அவ்வாளிடமிருந்து அவசியமானதும் அவசியமேற்படும்போதும் உப குழுக்களை நியமிக்கலாம்;

(ஓ) அத்தகைய தேசியக் கொள்கையையும் அதன் இடைநேர்விளைவான கருமங்களையும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக முன்னேற்றத்தை எடுத்துக்கூறும் அறிக்கைகளை ஆண்டுதோறும் மற்றும் கோரும் போதெல்லாம் அமைச்சரினூடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்; அத்துடன்

(ஔ) அவசர அடிப்படையில் ஏதேனும் விடயத்தில் அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

21உ ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புக் களை நடைமுறைப் படுத்த தவறுதல்

**21ஊ.** (1) பிரிவு 21 உ என்பதன் கீழ் பணிப்பு அல்லது விதப்புரை வழங்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அல்லது அக்கறை கொண்டவர் அத்தகைய பணிப்புரையை அல்லது விதப்புரையை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நடைமுறைப்படுத்த உட்கருதவில்லையாயின் அல்லது அத்தகைய பணிப்பை அல்லது விதப்புரையை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நடைமுறைப்படுத்தவில்லையாயின் அத்தகைய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அல்லது அக்கறை கொண்டவர் அத்தகைய பணிப்புரை அல்லது விதப்புரை கிடைத்த தேதியிலிருந்து நியாயமான காலப்பகுதியினுள் அதற்கான காரணங்களை தேசியக் குழுவுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் கூறப்பட்ட காரணங்களுடன் தேசியக் குழுவானது திருப்திப்படாமை அல்லது அத்தகைய ஒழுங்குபடுத்தலும் அதிகாரசபை அல்லது அக்கறை கொண்டவர் ஏதேனும் வலிதான காரணமின்றி அத்தகைய பணிப்புரையை அல்லது விதப்புரையை நடைமுறைப் படுத்தவில்லையெனத் தோன்றினால் அல்லது அத்தகைய பணிப்பு அல்லது விதப்புரை எதிர்பார்த்த நியமங்களை அடையவில்லையாயின் தேசியக் குழுவானது, அத்தகைய ஆற்றுப்படுத்துகைக்கான காரணங்களுடன் அத்தகைய தவறுகைகளை அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு தோதான நடவடிக்கைக்காக உடனடியாக ஆற்றுப்படுத்தலாம்.

அக்கறை கொண்டவர்களுக்கு அமைச்சரவை பணிப்புகளை வழங்குதல்

**21எ.**(1) அமைச்சரவையானது –

(அ) 21உ ஆம் பிரிவின் (i) என்னும் பந்தியின் கீழ் அக்கறை கொண்டோருக்கு தேசியக் குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதப்புரையை நடைமுறைப்படுத்துமாறு பணிக்கலாம்;

(ஆ) 21ஊ ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் கீழ் தேசியக் குழுவினால் ஆற்றுப்படுத்தப் பட்டவை தொடர்பில் தோதான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(2) விடயத்திற்கேற்ப, ஒவ்வொரு அக்கறை கொண்டவரும் அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரவையால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பை அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பின்பற்றியொழுகுதல் அல்லது இணங்கியொழுகுதல் வேண்டும்.”.

## நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தம்)

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக் கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) “நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபையொன்று அல்லது கணக்காய்வாளர் ஒருவர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகார சபையொன்று அல்லது நிறுவனத்திற்கு வெளிவாரியாக பணியாற்றுகின்ற தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

‘‘(அ) ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டிற்காக ஆளொருவரின் புலனாய்வொன்றுக்கு அல்லது குற்றவழக்குத் தொடுப்புக்கு இயைபான;”;

(3) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் “சட்டவிரோதமான செயலொன்றாக அமையும் ஏதேனும் தவறைப் புரிதல் தொடர்பான; அல்லது” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் ஏதேனும் தவறைப் புரிதல் தொடர்பான:” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(இஅ) பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்னும் தவறொன்றாக அமையும் ஏதேனும் தவறைப் புரிதல் தொடர்பான; அல்லது”; அத்துடன்

(5) “அந்நிறுவனத்தின் மேற்பார்வை அதிகாரி அல்லது கணக்காய்வாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அத்தகைய மேற்பார்வை அதிகாரி அல்லது தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“மேற்பார்வை அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை இணங்கியொழுகப் படுதலை உறுதிப் படுத்துதல் வேண்டும்

**23.**(1) நிறுவனமொன்றின் மேற்பார்வை அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை விடயத்திற்கேற்ப –

(அ) தேவைப்படுத்தப்படுமாறு இடர்களை கிரமமான பரிசோதனை ஊடாக நிறுவனமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள், வழிகாட்டு நெறிகள், பணிப்புக்கள் மற்றும் சுற்றிக்கைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை சரிபார்த்தல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் இணங்கியொழுகாமையைப் பற்றி நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்;

(ஆ) பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பு அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு பெருக்கத்திற்கு நிதியளித்தல் அல்லது சட்டவிரோத செயற்பாடொன்றாக அமையும் ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் புலனாய்வில், குற்ற

வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கைளில் சட்டத்தை வலுவிக்கிடும் முகவராண்மைகளுடனும் நிதிசார் உளவறிதற் கூறுடனும் ஒத்துழைத்தல் வேண்டும்.

(2) நிதிசார் உளவறிதற் கூறானது, ஏதேனும் மேற்பார்வை அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் இல்லாமையின் போது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தேவைப்படக்கூடியவாறான கிரமமான பரிசோதனைகளினூடாக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் சரிபார்த்தலை மேற்கொள்ளுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் V ஆம் பாகத் திலுள்ள தலையங் கத்தை மாற்றீடு செய்தல்

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவின் உடன் முன்னர் V ஆம் பாகத்தில் காணப்படுகின்ற தலையங்கம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் தலையங்கம் இடப்படுகிறது:-

**"எல்லைப்புறத்தில் காசை அறிக்கையிடுதல்".**

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் ஒராம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஆ) ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில் ஏறவிருக்குமிடத்து அல்லது புறப்படவிருக்குமிடத்து அல்லது ஏறியிருக்குமிடத்து அல்லது புறப்பட்டிருக்குமிடத்து,"; அத்துடன்

(ஆ) "எந்தக் காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றதகு சாதனங்கள் தொடர்பில் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கை

யிடுதலொன்று தேவைப்படுத்தப் படுகின்றதோ அந்த ஏதேனும் பணத்தை அல்லது கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களை அவ்வாள் தம்மகத்தே வைத்திருக்கின்றாரோ எனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எந்தக் காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்கள் தொடர்பில் (5) ஆம் உட்பிரிவின் கீழ் அறிக்கையிடுதலொன்று தேவைப்படுத்தப் படுகின்றதோ அந்த ஏதேனும் பணத்தை அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றதகு சாதனங்களை அவ்வாள் தம்மகத்தே வைத்திருக்கின்றாரோ எனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

(4) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிசோதனையின் அல்லது தேடுகையின் போது காணப்பட்ட காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனம் சட்டவிரோதமான செயற்பாடொன்றை புரிதல் தொடர்பான சான்றை அளிக்கலாம் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அப்பணத்தை அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனத்தை பறிமுதல் செய்யலாம்.";

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(5) நான்காம் உட்பிரிவின்கீழ் காசைக் கொண்டுள்ளவரான அல்லது கைமாற்றத்தகு சாதனங்களைக் கொண்டுவருபவரான அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் நிதிசார் உளவறிதற் கூறுக்கு அத்தகைய பறிமுதல் பற்றி உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும்."; அத்துடன்

(4) இப்பிரிவின் ஓரக் குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலமும்:-

"எல்லைப்
புறத்தில் காசை
அறிக்கையிடுதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "ஏதேனும் காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் சட்டவிரோதமான தொழிற்பாட்டைப் புரிந்ததிலிருந்து பெறப்பட்டது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் சட்டவிரோதமான தொழிற்பாட்டைப் புரிந்ததிலிருந்து பெறப்பட்டது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "எவரேனுமாளினால் முன்னப்பட்டது;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனுமாளினால் முன்னப்பட்டது"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "நியதிகளின் படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியதிகளின்படி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவில் "கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனம் அல்லது கைமாற்றத்தகு சாதனங்கள்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) இருபத்து நான்காம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 25 ஆம் பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட காசும் கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களும் –

(அ) ஏதேனும் சட்டவிரோதமான செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்டன அல்லது தவறொன்றைப் புரிவதில் அல்லது 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான தவறொன்று தொடர்பில் எவரேனுமாளினால் பயன்படுத்துவதற்கு உட்கருதப்பட்டது எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன; அத்துடன்

(ஆ) அவற்றின் மூலவளம் அல்லது பெறுகை மேலும் புலனாய்வு செய்யப்படும் பொழுது அவற்றைத் தொடர்ந்து தடுத்து வைத்தலானது நியாயப்படுத்தப்படுகின்றது,

என அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றம் திருப்திப்படுவதன் மீது பறிமுதலின் தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கான கட்டளையொன்றை வழங்கினாலன்றி, பறிமுதலின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்கு மேல் தடுத்துவைக்கப்படுதலாகாது; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் “திரட்டு நிதியத்திற்கு இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அரசிற்கு இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தாற் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“அறிவிக்காமல் குறித்துரைக்கப் பட்டதை விடக் கூடுதலான பணத்தொகையுடன் இலங்கைக்கு வருதல் அல்லது இலங்கையை விட்டுச் செல்லுதல் அல்லது வந்தடைதல்

**27.**(1) நிகழ்வைப் பற்றி இயைபான அதிகாரிக்கு முதலில் அறிவிக்காமல் அத்தகைய ஆளிடம் அல்லது அத்தகைய ஆளின் பொதியில் காசாக அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களாக 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் விதித்துரைக்கப்பட்டதை

விடக் கூடுதலான பணத்தொகையுடன் இலங்கையை விட்டுச் செல்கின்ற அல்லது இலங்கையை வந்தடைகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனத்தின் பெறுமதியின் மூன்று மடங்கை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படுதற்களாதல் வேண்டும்.

(2) காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனம் அமைச்சரால் குறித்துரைக்கப்பட்டதை விடக் கூடுதலான பணத்தொகையாகவிருந்தால் எல்லா வில்லங்களிலிருந்தும் விடுபட்டு அரசிற்கு இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 28 ஆம் பிரிவை திருத்துதல்

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் “தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன்”என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்குப் பதிலாக “தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதவானால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுதற்காளாதலும் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) "பணம் தூய்தாக்கலின் தவறொன்றின் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கும் தவறொன்றின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பணம் தூய்தாக்கலின் தவறொன்றின்அல்லதுபயங்கரவாதத்திற்கு நிதியளிக்கும் தவறொன்றின் அல்லது பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளிக்கும் தவறொன்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன்; குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(4) ஆளொருவர் ஏதேனும் ஆவணம் அல்லது பொருள் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின்கீழ் அல்லது 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழானதவாறு அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்னும் தவறு என்பவற்றுக்கான புலனாய்வுக்கு இயைபானது என அறிந்திருந்தும் அல்லது நம்புவதற்கான காரணமிருந்தும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைப் போலியாகப் புனைவாராயின், மறைப்பாராயின் அல்லது அதன் உண்மைத் தன்மையை அல்லது நேர்மைத்தன்மையை பாதிப்பதற்கான வேறு ஏதேனும் செயலைச் செய்வாராயின், அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பது நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுக:-

"(5) ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின்கீழ் அல்லது 2005 ஆம் ஆண்டின் 25 ஆம்

இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான தவறொன்றின் அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்னும் தவறு என்பவற்றின் புலனாய்வுக்கு இயைபானது என அறிந்துகொண்டும் அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணம் இருக்கையில் அத்தகைய ஆவணத்தை அல்லது பொருளை அழிக்கின்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கின்ற ஆள் எவரும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.";

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(6) நிறுவனமொன்றுடன் ஒரு புனைப்பெயரில் அல்லது பொய்ப் பெயரில் கணக்கொன்றை ஆரம்பிக்கின்ற அல்லது தொழிற்படுத்துகின்ற அல்லது ஆரம்பிப்பதற்கு அல்லது தொழிற்ப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்ற அல்லது கணக்கொன்றை ஆரம்பிக்கும் அல்லது தொழிற்ப்படுத்தும் போது பொய்த் தகவல் வழங்குகின்ற ஆளொருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதவானொருவரால் குற்றத்தீர்ப்

பளிக்கப்படுவதன் மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(7) ஆளெவரும் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (இ) இன் கீழ் கொடுத்துதவப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை நியாயமான காரணமின்றி வழங்க மறுத்தால் அல்லது தவறினால் அத்தகைய ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்"; அத்துடன்

(7) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"பொய்யான தகவல்
முதலியவற்றைக்
கொடுப்பது தவறொன்றாதல்".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 28அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் பிரிவு 28அ வாக பயனுறுதலும் வேண்டும்:-

“ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் தவறுகள்

**28அ.** இச்சட்டத்தின் கீழ் தவறொன்றானது ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அவ் ஆட்கள் குழுவானது-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக அக் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர் அல்லது ஏனைய அலுவலர்;

(ஆ) குழுமமொன்று, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளர்; அத்துடன்

(இ) குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக, அத்தகைய குழுவின் உறுப்பினராகவிருக்கும் ஒவ்வொரு தனியாளுக்கும் அத்துடன் அதன் முகாமைத்துவத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாகவிருக்கும் ஒவ்வொரு அலுவலரும்,

அத்தவறொன்றைப் புரிந்ததாக கருதப் படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், விடயத்திற்கேற்ப அத்தகைய பணிப்பாளர், அலுவலர், பங்காளர் அல்லது தனியாள் தன்னுடைய அறிவின்றி அல்லது அத்தவறு புரியப்படுவதை தடுப்பதற்காக எல்லா உரிய விழிப்பு கவனத்தையும் தான் பிரயோகித்ததாக நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால் அத் தவறானது புரியப்பட்டதாக கருதப்படுதலாகாது.”.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் விடயங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) தேசிய பொருளாதாரத்தின் நலன்களை கருத்திற் கொண்டு, ஏதேனும் தொழிலை “குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழிலாக அல்லது உயர்தொழிலாக” அல்லது “நிதிசார் தொழிலாக” விதித்துரைத்தல்; அத்துடன்

(ஆ) கொடுக்கல்வாங்கலொன்று அல்லது கணக்கொன்று தொடர்பில் எவரேனும் ஆளொருவரை வாடிக்கையாளராக விதித்துரைத்தல்.”.

முதன்மைச் சட்ட வாக்கத்தில் 29அ, 29ஆ மற்றும் 29இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 29அ, 29ஆ மற்றும் 29இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“விதிகள்

**29அ.**(1) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனுறுதிமிக்க நடைமுறைப்படுத்தலுக்காக இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட விதிகளுக்காக ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கு பங்கமின்றி, பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) குறிப்பிட்ட எவரேனும் வாடிக்கையாளரை அல்லது வாடிக்கையாளர்களின் வகுப்பை இனங்காண்பதற்கும் சரிபார்ப்பதற்கும் தேவைப்படுத்தப்பட்ட அலுவலக முறையான இனங்காணும் ஆவணங்கள் அல்லது வேறு நம்பகமான மூல ஆவணங்கள் அல்லது தகவல் அல்லது தரவு அல்லது சான்று;

(ஆ) இரண்டாம் பிரிவின் நோக்கங்களுக்காக இனங்காணுதலினதும் சரிபார்த்தலினதும் தேவைப்பாடுகளின் நேர வரையறை;

(இ) நிறுவனமொன்றின் வாடிக்கையாளர்களினால் கொண்டு நடாத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை இனங் காணுதல் சரிபார்த்தல் என்பவற்றின் தேவைப்பாடுகளின் தொடக்கநிலை ஏற்புடைத்தாக வேண்டிய சூழ்நிலைகள் அல்லது முறைமைகள்;

(ஈ) எளிமைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை நடாத்துதல்;

(உ) பதிவேடுகளை வைத்திருத்தல், கடப்பாடுகளை அறிக்கையிடுதல், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை இனங்காணுதல், கொடுக்கல் வாங்கல்களின் இடைநிறுத்தம் மற்றும் வாடிக்கையாளர் சோதனை;

(ஊ) இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு

இடர் அடிப்படையிலான அணுகுமுறையின் விண்ணப்பம்;

(எ) 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டவாறு வாடிக்கையாளரின் நன்மைபயக்கும் சொந்தக்காரரின் இனங் காணுதலும் அடையாளத்தை சரிபார்த்தலும்; அத்துடன்

(ஏ) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் அவசியம் எனக் கருதக் கூடியவாறான கொடுக்கல் வாங்கல்களின் ஏதேனும் வகுதிக்கு தோற்றுவிப்பாளர் மற்றும் பயனுகரி அல்லது வேறு எவரேனும் தொடர்புபட்ட திறத்தவரின் தகவலை பெறுதல்; அத்துடன்

(ஐ) 2 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழான நிறுவனங் களுக்கிடையில் தகவல்களைப் பகிர்தல்.

(3) இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் சுமத்தப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த நிறுவனங்கள், வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் தொடர்பில் வேறுபடலாம்.

(4) நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரானவர், இப்பிரிவின் கீழ் விதிகளை ஆக்குகையில் நிதிசார் செயற்பாட்டுச் செயலணியின் விதப்புரைகளை கணக்கிலெடுத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத்திகதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பணிப்புக்கள் முதலியவற்றை வழங்குவதற்கு நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரின் தத்துவம்

**29ஆ.** நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிறுவனங்களுக்கு பணிப்புக்களை, சுற்றறிக்கைகளை அல்லது வழிகாட்டி நெறிகளை எழுத்தில் வழங்கலாம்.

நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப் பட்டிருப்பதாக கருதப்படும் விதிகள் முதலியவை

**29இ.** இச்சட்டத்தின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏலவே இருந்து வருகின்ற விதிகள், பணிப்புக்கள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிகள் ஆகியவை, 14ஆ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் ஆக்கப்பட்டதாக அல்லது வழங்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 30அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 30அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"வெளிநாட்டு வங்கிகளின் அத்தாட் சிப்படுத்தப் பட்ட கூற்றுக்களின் ஏல்தகவு

**30அ.**(1) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றவழக்கில், அதற்கு முரணானது என எண்பிக்கப்படும்வரை வெளிநாட்டு வங்கியொன்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூற்றொன்றானது அதன்கண் குறிப்பிடப்பட்ட கருமங்களின் சான்றாக ஏற்கத்தக்கதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூற்றொன்று போலியாகப் புனையப்பட்டது, அல்லது துல்லியமற்றது அல்லது முழுமையற்றது என ஆளொருவர் குற்றஞ்சாட்டுகின்றவிடத்து, அத்தகைய நிகழ்வின் எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய ஆளின் பாற்பட்டது.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூற்று" என்பது, அத்தகைய கூற்றினடியில் அப்பதிவுக் குறிப்பின் உண்மையான கூற்றென்றும் அப்பதிவுக்குறிப்பு சாதாரண மற்றும் வழமையான தொழில் நடைமுறையின்போது ஆக்கப்பட்டதென்றும் அத்தகைய பதிவுக்குறிப்பின் பதிவொன்று அவ்வங்கியின் கட்டுக்காப்பிலே இன்னும் இருக்கின்றதென்றும் எழுதப்பட்டு அத்தகைய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட சான்றிதழொன்றுடன் சேர்த்து வங்கிப் பதிவுகளில் ஏதேனும் பதிவுக்குறிப்பை உள்ளடக்கிய ஒரு கூற்று எனப்பொருள்படும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 31 ஆம் பிரிவை திருத்துதல்

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) "நிறுவனமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசாங்க நிறுவனம் அல்லது முகவராண்மை, சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மை, மேற்பார்வை அதிகாரசபை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற நிறுவனம்

ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு
இணங்கியொழுகுவதற்கான
கடமை அரசாங்க
நிறுவனங்கள் அல்லது
முகவராண்மைகள்,
நிறுவனங்கள்
முதலியவற்றுக்குண்டு.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"நிறுவனங்களின் வெளிநாட்டு கிளைகள் மற்றும் துணைநிலைகளுக்கு இச்சட்டத்தின் ஏற்புடைமை

**331.அ.**(1) நிறுவனமொன்று இச்சட்டத்தினால் மற்றும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புகளினால் ஏற்பாடுசெய்யப்பட்டவற்றை விட பணம் தூய்தாக்கலை முறியடித்தால், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் பெருமளவிலான தயாரிப்புக்கு நிதியளித்தல் தொடர்பில் அத்தகைய வெளிநாடுகள் அல்லது வெளிநாட்டு அரசுகள் என்பவற்றின் இயைபான எழுத்திலான சட்டங்கள் குறைந்தளவான கடுமையான தேவைப்பாடுகளை ஏற்பாடுசெய்கின்றவிடத்து, இச்சட்டத்தின் மற்றும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புகள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் வெளிநாடுகளில் அல்லது வெளிநாட்டு

அரசுகளிலுள்ள அதன் கிளைகள் மற்றும் பெரும்பான்மையாக சொந்தக்கொள்ளப்பட்ட துணைநிலைகள் இணங்கியொழுகுதலை உறுதிசெய்தல் வேண்டும்.

(2) ஏதேனும் வெளிநாட்டின் அல்லது வெளிநாட்டு அரசின் இயைபான எழுத்திலான சட்டங்கள் இச்சட்டத்தின் மற்றும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புகளின் ஏற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலை அனுமதித்தலாகாது. அத்தகைய ஒவ்வொரு நிறுவனமும் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரித்தல் என்பவற்றின் இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் தோதான மேலதிக வழிமுறைகளை ஏற்புடமை செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, மேலதிக வழிமுறைகள், மேலதிக முற்காப்பு மற்றும் அதிகரிக்கப்பட்ட மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும்.".

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 33 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"பொருள் கோடல்

**33.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"கணக்கு" என்பது, நிறுவனத்தினால் பின்வரும் ஏதேனும் வசதி அல்லது ஒழுங்கேற்பாடு என்று பொருள்படும் –

(அ) காசு வைப்பீடுகளை ஏற்றல்;

(ஆ) காசு மீளப்பெறுதல்களை அனுமதித்தல்;

(இ) நிறுவனத்தின் மீது வரையப்பட்ட காசோலைகளை அல்லது கொடுப்பனவுக் கட்டளைகளைச் செலுத்துதல், அல்லது நிறுவனமில்லாத ஆளொருவரின் சார்பில் காசோலைகளை அல்லது கொடுப்பனவுக் கட்டளைகளைச் சேகரித்தல்;

(ஈ) பாதுகாப்பு வைப்பீட்டுப் பெட்டகங்களை அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலான பாதுகாப்பு வைப்பீட்டை பேணுதல்,

அத்துடன் நிறுவனமொன்றிற்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் வேறு ஏதேனும் ஒத்த தொழில் அல்லது உயர்தொழில் உறவை உள்ளடக்கும்;

“அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பது –

(அ) (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்னும் பதவி வரிசைக்கு மேற்பட்ட பொலிசு அலுவலர் ஒருவர்; அல்லது

(ஆ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சுங்க அத்தியட்சகர் என்னும் பதவி வரிசைக்கு

மேற்பட்ட சுங்க அலுவலர் ஒருவர்;

என்று பொருள்படும்;

‘‘கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்கள்” என்பது, புனைப்பெயர்கொண்ட செலுத்துனருக்கு அல்லது வேறுவகையில் ஆக்கப்பட்ட கொண்டுவருபவர் வடிவத்தில் அல்லது வேறுவகையில் அதாவது, பிரயாணிகளின் காசோலைகள், காசோலைகள், கொண்டு வருபவரால் முறிகள், வாக்குறுதிப்பத்திரங்கள், காசுக்கட்டளைகள் மற்றும் மட்டுப்பாடின்றி புறக்குறிப்பிடப்பட்ட அஞ்சல் கட்டளைகள் அல்லது ஒப்படைத்தலின் மீது அத்தகைய உரித்து அதற்கு பரிமாற்றும் அத்தகைய வேறு வடிவத்தில் உள்ள பணச் சாதனங்கள் எனப் பொருள்படும்;

“பயனுகரும் சொந்தக்காரர்” என்பது,

(அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 130ஒ என்பதில் வரைவிலக்கணங் கூறப் பட்டதான பயனுகரும் சொந்தக்காரரான;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு என்னும் விடயத்தில் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச்சட்டத்தில் வரை விலக்கணங் கூறப்பட்டதான அல்லது வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்புக்கு

ஒத்த வேறு ஏதேனும் சட்ட ஒழுங்கேற்பாட்டில் இக்கட்டளைச் சட்டத்தின் 19அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சமமான பதவியை வகிக்கின்றவரான;

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பன ஏற்புடமையாகாத விடத்து, உருவகமொன்றைஅல்லது நம்பிக்கைப்பொறுப்பை அல்லது வேறு சட்ட ஒழுங்கேற்பாட்டை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் இறுதியாக சொந்தங் கொண்ட அல்லது கட்டுப்படுத்துகின்ற வரான; அல்லது

(ஈ) எந்த உருவகம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு அல்லது ஏனைய சட்ட ஒழுங்கேற்பாடு தொடர்பில் கொடுக்கல் வாங்கலொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த உருவகம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு அல்லது ஏனைய சட்ட ஒழுங்கேற்பாடுள்ள;

இயற்கையான ஆள் எனப் பொருள்படும்;

“காசு” என்பது, வழங்கப்படும் நாட்டில் சட்டமுறையான நாணயமாக குறித்தொதுக்கப்படும் ஏதேனும் நாணயம் என்று பொருள்படும் என்பதுடன் கொண்டுவருபவரால்

கைமாற்றத் தக்க சாதனங்களையும் உள்ளடக்கும்;

“நிறுத்தமும் ஒதுங்கியிருத்தலும் கட்டளை” என்பது, 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மீறுகை அல்லது தவறுகை தொடர்பில் ஒரு நிறுவனம் குறிப்பிட்ட நடத்தை அல்லது நடத்தை நெறிமுறை ஒன்றை தொடர்வதிலிருந்து தடைசெய்து நிதிசார் உளவறிதற் கூறின் தலைவரினால் வழங்கப்படும் நிருவாக தடைவிதிப்பு என்று பொருள்படும்;

“மத்திய வங்கி” என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருள்படும்;

“தகுதிவாய்ந்த அதிகாரசபை” என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கர வாதத்துக்கு நிதியளித்தல் அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலை முறியடிக்கும் பொறுப்புடன் தத்துவமளிக்கப்பட்ட அல்லது பொறுப்பிக்கப் பட்டதுமான ஏதேனும் அரசாங்க முகவராண்மை என்று பொருள்படும் என்பதுடன் நிதிசார் உளவறிதற் கூறையும் உள்ளடக்கும்;

“நாணயம்” என்பது, சட்டமுறையான நாணயமாக குறித்தொதுக்கப் பட்டதும் வழங்கப்படும் நாட்டில்

பரிவர்த்தனை ஊடகமொன்றாக சம்பிரதாயபூர்வமாக பயன்படுத்தப்படுவதும் ஏற்றுக்கொள்ளப்படுவதுமான இலங்கையின் அல்லது வெளிநாடான்றின் நாணயம் என்று பொருள்படும்;

"வாடிக்கையாளர்" என்பது, ஒரு கொடுக்கல்வாங்கல் அல்லது கணக்கு தொடர்பில் -

(அ) எந்த ஆளின் பெயரில் ஒரு கொடுக்கல்வாங்கல் அல்லது கணக்கொன்று ஒழுங்கேற்பாடு செய்யப்படுகின்றதோ, திறக்கப்படுகின்றதோ, அல்லது பொறுப் பேற்கப் படுகின்றதோ அந்த ஆளையும்;

(ஆ) கொடுக்கல்வாங்கல் அல்லதுகணக்கொன்றுக்கு கையொப்பமிடும் ஆளொருவரையும்;

(இ) எந்த ஆளுக்கு கொடுக்கல் வாங்கல் ஒன்று சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதோ அல்லது கைமாற்றப் பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆளையும்;

(ஈ) கொடுக்கல்வாங்கலொன்றை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளையும்; அல்லது

(உ) ஒரு கொடுக்கல்வாங்கல் அல்லது கணக்கு தொடர்பில் இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் வாடிக்கையாளர் ஒருவராக விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆளையும் உள்ளடக்கும்.

“குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழில்கள் அல்லது உயர்தொழில்கள் என்பது -

(அ) 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டதான பணச் சூதாட்டம் மற்றும் எண்ணிம பணச் சூதாட்டம்;

(ஆ) ஆதன அபிவிருத்தியாளர்கள் உள்ளடங்கலான நிலையான சொத்து முகவர்கள்;

(இ) ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்றாம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும் கற்களும் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாத அரும் உலோகங்களில் அரும் மற்றும் ஓரளவு அருங்கற்களில் வியாபாரிகள்;

(ஈ) வழக்குரைஞர்கள், நொத்தாரிசுகள், வேறு சுயேச்சையான சட்ட உயர் தொழிலர்கள் அல்லது கணக்காளர்கள் பின்வரும் எவையேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக கொடுக்கல்வாங்கல்களை ஆயத்தம் செய்யும்போது அல்லது கொண்டு நடாத்தும்போது -

(i) நிலையான சொத்து கொள்வனவு மற்றும் விற்பனை;

(ii) வாடிக்கையாளரின் பணத்தை, பிணையங்களை அல்லது கணக்குகளை முகாமை செய்தல்;

(iii) வங்கி சேமிப்பு அல்லது பிணைப் பொறுப்பு கணக்குகளின் முகாமைத்துவம்;

(iv) கம்பெனிகள் உருவாக்கத்திற்கு, தொழிற்பாட்டிற்கு அல்லது முகாமைத்துவத்திற்கு உதவு தொகைகளை ஒழுங்கு செய்தல்; அத்துடன்

(v) சட்ட ஆட்களின் உருவாக்கம், தொழிற்பாடு அல்லது முகாமைத்துவம் அல்லது சட்ட

ஒழுங்கேற்பாடுகள் அல்லது தொழில் உருவகங்களின் வாங்குதலும் விற்பனையும்;

(உ) மூன்றாம் திறத்தவர்களுக்கு பின்வரும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகளை வழங்கும் தொழில் ஒன்று என்றவாறாக இருக்கின்ற, இவ்வரைவிலக்கணத்தால் மேவப்பட்ட வேறு வகையிலல்லாத நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பெனி சேவை வழங்குநர்கள்:-

(i) சட்ட ஆட்கள் அல்லது சட்ட ஒழுங்கேற்பாடுகளின் உருவாக்கம் அல்லது முகாமைத்துவம்;

(ii) கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது செயலாளர் ஒருவராக, பங்காண்மை யொன்றின் பங்காளராக, அல்லது வேறு சட்ட ஆட்கள் தொடர்பில் அதனையொத்த பதவி யொன்றில் செயலாற்றுதல் அல்லது செயலாற்றுவதற்கு வேறொரு ஆளை ஒழுங்கேற்பாடு செய்தல்;

(iii) கம்பெனியொன்றுக்கு, பங்காண்மை யொன்றுக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டிற்கு பதிவு செய்யப்பட்ட

அலுவலக மொன்றை, தொழில் முகவரியை அல்லது இடவசதியை, கடிதத்தொடர்பு அல்லது நிருவாக முகவரியை வழங்குதல்;

(iv) வெளிப்படையான நம்பிக் கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை ஒழுங்கேற்பாடு செய்தல், அல்லது வேறு ஏதேனும் சட்ட ஒழுங்கேற்பாட்டின் வடிவத்துக்கு ஒத்த பணியை புரிதல்; அல்லது

(v) வேறோர் ஆளுக்கு நியமித்தர் பங்காளர் ஒருவராகச் செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை ஒழுங்கேற்பாடு செய்தல்;

(ஊ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் கரைகடந்த கூறுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வரைவிலக் கணங்களுக்கிணங்க (அ) தொடக்கம் (உ), (எ) அல்லது (ஏ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில், உயர் தொழில் அல்லது செயற்பாடுகளின் ஏதேனும் கரைகடந்த கூறு;

(எ) இரண்டாயிரத்து இருபத்தியோராம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார

ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டிய அல்லது உரிமம் வழங்கப்பட்டிருக்க வேண்டிய, (அ) தொடக்கம் (ஊ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தொழில்களில் ஈடுபட்ட எவரேனும் ஆள்; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் காலத்துக் காலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

“ஆவணம்” என்பது, தகவலின் ஏதேனும் பதிவேடு என்று பொருள்படும் என்பதுடன் –

(அ) எதன்மீது எழுத்துருவம் காணப் படுகின்றதோ அதனையும்;

(ஆ) எதன்மீது, அதனைப் பொருள் கொள்ளும் தகைமையுடைய ஆட்களுக்குக் கருத்தை தரும் குறிகள், எண்கள், அடையாளங்கள்அல்லதுமாறிகள் என்பன காணப்படுகின்றனவோ அதனையும்;

(இ) வேறு எதனதும் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ எதிலிருந்து ஒலிகளை, உருவங்களை அல்லது எழுத்துக்களை உண்டுபண்ண முடியுமோ அதனையும்;

(ஈ) ஒரு தேசப்படத்தையும், வரைபடத்தையும், வரைதலையும், நிழற்படத்தையும் அல்லது

அதனையொத்த விடயத்தையும்; அத்துடன்

(உ) இலத்திரனியல் வழிகளில் வைத்திருக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட மேற்கூறப்பட்ட எதனையும்,

உள்ளடக்கும்;

"நிதிசார் உளவறிதற் கூறின் எக்மன்ட் குழுமம்" என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் அதனுடன் இணைந்த ஊகத்தவறுகள் என்பவற்றை முறியடிப்பதற்கு நிபுணத்துவத்தையும் நிதிசார் உளவறிதலையும் பாதுகாப்பாக பரிமாற்றுவதற்கான தளமொன்றுடன் உறுப்பு நிதிசார் உளவறிதற் கூறுகளை வழங்கும் 1995 இல் நிறுவப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறுகளின் ஐக்கிய குழு எனப் பொருள்படும்;

"இலத்திரனியல் வழிகள்" என்பது ஊடகத்தை கவனத்திற் கொள்ளாது இலத்திரனியல், காந்த, ஒளியியல் அல்லது ஒத்த ஆற்றல்களினால் உருவாக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, கிடைக்கப்பெற்ற அல்லது சேமிக்கப்பட்ட தகவலை உள்ளடக்கும்;

"நிதித் தொழில்" என்பது, பின்வரும் தொழில்கள் அல்லது செயற்பாடுகளுள் எதனையும் உள்ளடக்கும்:-

(அ) 1998 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில்

சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான வங்கித்தொழில்;

(ஆ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான நிதித் தொழில்;

(இ) 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது கூட்டுறவுச் சங் கங்களின் பதிவுசெய்தலை ஆளுகின்ற ஏதேனும் மாகாண சபையின் நியதிச்சட்டம் ஒன்றினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் சங்கம் ஒன்றினால் கொண்டு நடாத்தப்படுகின்ற பின்வரும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஏதேனும் தொழிற் செயற்பாடுகள்:-

(i) வைப்பீடுகளின் ஏற்பு;

(ii) பணத்தை கடன் வழங்குதல்;

(iii) எத்தன்மையானதுமான ஏதேனும் முறையில் பணத்தை முதலீடு செய்தல்; அல்லது

(iv) பணத்தை கடன் வழங்குதல் மற்றும் எத்தன்மையானதுமான ஏதேனும் முறையில் பணத்தை முதலீடு செய்தல்;

(ஈ) 2013 ஆம் ஆண்டின் 1 ம் இலக்க, சமுர்த்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியொன்றினாலும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கத்தினாலும் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் நிதிசார் செயற்பாடுகள்;

(உ) (90 ஆம் அத்தியாயமான) அடகு பிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் கீழ் அடகுபிடித்தல்;

(ஊ) பாவனையாளர் கடன், ஈட்டுக்கடன், தொழில் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளுதல் (உதவி பெற்றாயினுஞ்சரி அல்லாதலாயினுஞ்சரி) அத்துடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தல் என்பனவுட்பட கடன்வழங்கல்;

(எ) பாவனையாளர் உற்பத்திப் பொருட்கள் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல் தவிர்ந்த நிதிக் குத்தகையளித்தல்;

(ஏ) பணம் அல்லது பெறுமதி கைமாற்ற சேவைகள்;

(ஐ) பணம் மற்றும் நாணயம் மாற்றும் சேவைகள்;

(ஒ) கொடுப்பனவு வழிமுறைகளை வழங்குதலும் முகாமைசெய்தலும் (அதாவது கடன் அட்டைகள், பற்று அட்டைகள், பிரயாணிகள் காசோலைகள், காசுக் கட்டளைகள் மற்றும் வங்கியாளர் வரைவுகள், மற்றும் இலத்திரனியல் பணம்);

(ஓ) பாவனையாளர் கடன், உதவி பெற்றாயினுஞ்சரி அல்லாததாயினுஞ்சரி இன்னொருவருக்காக தொழில் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளுதல் என்பனவுட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல், நிதிசார்ந்த உத்தரவாதங்களையும் கடப்பாடுகளையும் வழங்குதலும் அத்துடன் இழப்பித்தல் உட்பட வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தலும்;

(ஔ) அதன் சொந்தக் கணக்கிற்காக அல்லது வாடிக்கையாளர்களின் கணக்கிற்காக பணச் சந்தைச் சாதனங்கள் (அதாவது காசோலைகள், மாற்றுண்டியல்கள், வைப்புச்சான்றிதல்கள் அத்துடன் பெறுமதிகள்), அந்நியச் செலாவணி, செலாவணி, வட்டிவீதம் மற்றும் சுட்டிச் சாதனங்கள், வியாபாரப் பண்டங்கள், வருங்கால வியாபாரம் மற்றும் கைமாற்றத்தகு பிணையங்கள் என்பவற்றில் வியாபாரம் செய்தல்;

(க) பிணையங்களின் வழங்கீடுகளில் பங்குபற்றுதலும் அத்தகைய வழங்கீடுகள் தொடர்பான நிதிசார்சேவைகளை ஏற்பாடு செய்தலும்;

(ங) தனியாள் மற்றும் கூட்டமைப்பு முகாமைத்துவம்;

(ச) வேறு ஆட்கள் சார்பில் நிதியை அல்லது பணத்தை முதலீடு

செய்தல், நிர்வகித்தல் அல்லது முகாமை செய்தல்;

(ஞ) வேறு ஆட்கள் சார்பில் காசை அல்லது திரவப் பிணையங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும் நிர்வகித்தலும்;

(ட) பாதுகாப்பு கட்டுக்காப்பு சேவைகள்;

(ண) வாழ்நாள் காப்புறுதி மற்றும் காப்புறுதி தொடர்பான ஏனைய முதலீட்டை பொறுப்பேற்றலும் நிலைநிறுத்தலும் அதேபோன்று முகவர்களாலும் தரகர்களாலும் காப்புறுதி இடைவருகை செய்தலும்;

(த) மூப்போய்வு உதவுதொகைத் திட்டத்தின் நம்பிக்கைப்பொறுப்பு நிருவாகம் அல்லது முதலீட்டு முகாமைத்துவம்;

(ந) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க,இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்டு சந்தை இடைத்தரகர் ஒருவரின் ஏதேனும் செயற்பாடு;

(ப) (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் நிதிசார் செயற்பாடு ;

(ம) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எண்ணிமச் சொத்துக்களின் சேவைகளை வழங்குதல்;

(ய) கரைகடந்த கூறுகளுக்கு எழுத்திலான வேறு எவையேனும் சட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட வரைவிலக்கணங்களுக்கிணங்க (அ) தொடக்கம் (ம), (ர) அல்லது (ல) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது செயற்பாட்டின் ஏதேனும் கரைகடந்த கூறு;

(ர) (அ) தொடக்கம் (ம) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எத்தொழில் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவேண்டிய அல்லது உரிமம் அளிக்கப் படவேண்டியதாகவுள்ளதோ அவ்வேதேனும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள்; அத்துடன்

(ல) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் காலத்துக் காலம் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

“நிதிசார் செயற்பாட்டுச் செயலணி” என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் அத்துடன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரித்தலுக்கு நிதியளித்தல் என்பவற்றிற்கு

எதிராக உலகளாவிய நிதிசார் முறைமையை பாதுகாப்பதற்கு கொள்கைகளை விருத்தி செய்கின்றதும் ஊக்குவிக்கின்றதுமான 1989 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட அரசாங்கங்களுக்கிடையிலான குழு எனப் பொருளாகும்.

நிதிசார் உளவறிதற் கூறின் விடயத்தில் "நிதிசார் உளவறிதல்" என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் அல்லது பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாடு ஆகியவற்றின் ஏதேனும் செயற்பாட்டுடன் தொடர்பான கிடைக்கக் கூடியதாகவுள்ள மற்றும் பெறக்கூடியதாகவுள்ள தகவல்களின் அடிப்படையில் அதன் தொழிற்பாட்டு மற்றும் செயல்நுணுக்க பகுப்பாய்வின் வெளிவருகை எனப்பொருள்படும்;

"வெளிநாடு" அல்லது "வெளிநாட்டு அரசு" என்பது, வெளிநாட்டின் அல்லது வெளிநாட்டு அரசின் காலணித்துவம், ஆள்புலம், பாதுகாப்பகம் அல்லது சார்நிலை அல்லது அத்தகைய வெளிநாட்டில் அல்லது வெளிநாட்டு அரசில் பதிவுசெய்யப்பட்ட கப்பல் அல்லது வானூர்தி என்பவற்றை உள்ளடக்குகின்றதுடன் சீன மக்கள் குடியரசின் ஹொங்கொங் விசேட நிருவாக பிராந்தியத்தை

உள்ளடக்கியதாக கருதப்படுதலும் வேண்டும்;

"அரசாங்க நிறுவனம் அல்லது முகவராண்மை" என்பது, அரசாங்கத்தின் அமைச்சு அல்லது திணைக்களம், உள்ளூர் அதிகாரசபை, மாநகரசபையொன்று, ஏதேனும் மாகாண சபையின் ஓர் அமைச்சு அல்லது திணைக்களமொன்று பகிரங்க கூட்டுத்தாபனம், ஏதேனும் தொழில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திடம் உரித்தாக்கப்பட்ட ஏனைய பொறுப்புமுயற்சி, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாக கருதப்படுகின்ற எக்கம்பனியில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை வைத்திருக்கின்றதோ அக்கம்பனி என்பவற்றையும் உள்ளடக்குகின்றது;

"நிறுவனம்" என்பது, இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் நிதித்தொழில் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாராத் தொழில் அல்லது உயர் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அதனைக்கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள் எனப்பொருள்படும்;

“சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மை” என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறை புலனாய்வு செய்வதற்கு அல்லது குற்றவழக்கிடுவதற்கு தத்துவமளிக்கப் பட்ட ஏதேனும் திணைக்களம், அதிகாரசபை அல்லது உருவகம் எனப்பொருள்படுவதுடன் என்பதுடன் தவறொன்றைப் புரிதலை புலனாய்வு செய்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

“உரிமமளிக்கப்பட்ட அதிகாரசபை” என்பது, இயைபான தொழில் அல்லது செயற்பாட்டை கொண்டு செல்வதற்கு உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான தத்துவங்களை ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையொன்று என்று பொருள்படும்;

“உள்ளூர் அதிகாரசபை” என்பது, மாநகர சபை, நகர சபை, பட்டின சபை அல்லது கிராம சபை எனப் பொருள்படுமென்பதுடன், ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்த அல்லது ஒத்த தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு

மற்றும் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஏதேனும் அதிகாரசபையினையும் உள்ளடக்கும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் இச்சட்டத்தின் விடயத்திலும் இச்சட்டம் தொடர்பிலும் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப்பொருள்படும்;

“பணத்தின் அல்லது பெறுமதியின் கைமாற்ற சேவைகள்” என்பது, ஏதேனும் தகவல் தொடர்பின் மூலம் அல்லது தகவல் மூலம், அல்லது எத்தீர்வு வலையமைப்பு அத்தகைய சேவை வழங்குநருக்கு உரித்தாகவுள்ளதோ அத்தீர்வு வலையமைப்பொன்றினூடாக கைமாற்றத்தின் மூலம்-

(அ) காசை அல்லது பணத்தின் பெறுமதியைப் பரிவர்த்தனை செய்தல்;

(ஆ) வேறு ஆட்களின் சார்பில் நிதிகளை அல்லது பணத்தின் பெறுமதியை சேகரித்தல், வைத்திருத்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது அனுப்புதல் அல்லது வேறுவகையில் நிதியின் அல்லது பணத்தின் பெறுமதியின் கைமாற்றங்களை நிறைவேற்றல்;

(இ) நிதிகளை ஒப்படைத்தல்; அல்லது

(ஈ) பிரயாணிகளின் காசோலைகளை, காசுக் கட்டளைகளை அல்லது அவற்றையொத்த சாதனங்களை வழங்கல், விற்பனை செய்தல் அல்லது மீட்டுக்கொடுத்தல் எனப்பொருள்படும்;

“பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தலுக்கான தவறு” என்பது, பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் உற்பத்திசெய்தல் மற்றும் நிதியளித்தல் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் என்பவற்றுக்கு பயன்கொடுக்கின்ற 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டதான பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதில் மற்றும் நிதியளித்தல் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம் அல்லது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்களுக்கு பயன்கொடுக்கும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள ஏதேனும் தவறு எனப் பொருள்படும்;

“பணம் தூய்தாக்கல் தவறு” என்பது, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம்

இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழ் 3 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான தவறொன்று எனப்பொருள்படும்;

"பயங்கரவாதிக்கு நிதியளிப்புச் செய்யும் தவறு" என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான தவறொன்று எனப்பொருள்படும்;

"தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு" என்பது, குறிப்பிட்ட இலக்குகளை (அதாவது, ஆட்கள், சொத்துக்கள், குற்றவியல் வலையமைப்புகள் மற்றும் கழகங்கள்) அடையாளம் காண்பதற்கும், குறிப்பிட்ட செயற்பாடுகள் அல்லது கொடுக்கல்வாங்கல்களின் தகவல்களை பின்பற்றுவதற்கும் மற்றும் அவ்விலக்குகள் மற்றும் சாத்தியமான குற்றச்செயல்களின் வரும்படிகள், பணம் தூய்தாக்கல் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் அல்லது சட்டவிரோத செயற்பாடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பிலானதீர்மானிப்பதற்கும் கிடைக்கக்கூடிய மற்றும் பெறப்பட்டபாலதான தகவல்களின் பயன்பாடு எனப் பொருள்படும்;

“ஆள்” என்பது, எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருள்படும் என்பதுடன், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி கூட்டிணைக்கப் படாததாயினுஞ்சரியான ஆட்கள் குழுவொன்றினையும் சட்ட ஆளுமையுடையதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரியான சட்ட ஏற்பாடொன்றையும் அத்துடன், இலங்கையின் உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய ஆள் அல்லது ஆட்களின் குழுவின் கிளை ஒன்றையும் உள்ளடக்கும்;

“விதித்துரைக்கப்பட்ட” என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்டவை எனப் பொருள்படும்;

“ஆதனம்” என்பது, பருப்பொருளாயினுஞ்சரி பருப்பொருளற்றதாயினுஞ்சரி அசைவுள்ளதாயினுஞ்சரி, அசைவற்றதாயினுஞ்சரி உருவமுள்ளதாயினுஞ்சரி உருவமற்றதாயினுஞ்சரி அல்லது எண்மவடிவிலாயினுஞ்சரி அனைத்து தன்மைத்தானதுமான ஒவ்வொரு வகையானததுமான சொத்துக்கள் என பொருள்படும் என்பதுடன் அத்தகைய சொத்துக்களுக்கான ஆவணங்கள் அல்லது சாதனங்கள், சான்றாகவுள்ள எரித்து அல்லது

அக்கறை என்பவற்றையும் உள்ளடக்குகின்றது;

“மாகாண சபை” என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 154அ இன் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் மாகாண சபை எனப்பொருள்படும்;

“பகிரங்கக் கூட்டுத்தாபனம்” என்பது, கொடை, கடன் அல்லது வேறுவகையான வழிமூலம் அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவாக வழங்கப்பட்ட நிதியங்கள் அல்லது மூலதனத்துடன், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கமபெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் எந்தக் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு தாபிக்கப்பட்டதோ அல்லது தாபிக்கப்படுகின்றதோ அந்தக் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப்பொருள்படும்;

“தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது –

(அ) இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப் பி ன ரா க வி ரு ந் து க ண க் கா ள ரா க த்

தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப் பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவரான ஒரு தனியாள் என்று பொருள்படும்; அல்லது

(ஆ) அதன் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் பட்டயம் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து கணக்காளராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கணக்காளர் குழுமம் எனப்பொருள்படும்;

“பதிவேடு” என்பது, எந்தப் பொருளில் ஆளொருவரினால், கணினி முறையினால் அல்லது வேறு உபாயத்தினால் வாசிக்கப்படும் அல்லது புரிந்துகொள்ளப்படும் ஆற்றலுள்ள தரவு பதிவு செய்யப்பட்டுள்ளதோ அல்லது அடையாளமிடப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பொருள் என்று பொருள்படும்;

"பதிவுசெய்தல் அதிகாரசபை" என்பது, இயைபான தொழில் அல்லது செயற்பாட்டை கொண்டு நடாத்துவதற்கு நிறுவனங்களை பதிவு செய்வதற்கு தத்துவங்களுடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்திலான அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபை என்று பொருளாகும்;

"ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை" என்பது, நிறுவனங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது நியமங்களை அதிகாரமளிப் பதற்கும் வலுவுறச் செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தத்துவங்களுடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபை என்று பொருளாகும்;

"சுய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை" என்பது, குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழில் அல்லது உயர் தொழிலினுள் (அதாவது சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள், ஏனைய சுயாதீன சட்ட உயர்தொழிலர்கள் அல்லது கணக்காளர்கள்) அதன் உறுப்பினர்களை ஒழுங்குப் படுத்துகின்ற, மேற்பார்வை செய்கின்ற, கண்காணிக்கின்ற மற்றும் மேற்பார்வை செய்கின்ற அதிகாரசபை என்று பொருளாகும்;

"குறித்துரைக்கப்பட்ட தனியாள் அல்லது குறித்துரைக்கப்பட்ட உருவகம்" என்பது –

(அ) பயங்கரவாதம் தொடர்பில் அப்போதைக்கு இலங்கையில் வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் நியதிகளின் படி தவறொன்றுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் செயலை அறிந்திருந்தும்-

(i) புரிந்துள்ள;

(ii) புரிய எத்தனித்துள்ள;

(iii) புரிவதில் பங்குபற்றியுள்ள; அல்லது

(iv) புரிவதற்கு வசதியளித்துள்ள,

தனியாள் ஒருவர் அல்லது அமைப்பொன்று; அல்லது

(ஆ) 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின் படி வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட தனியாள் ஒருவர் அல்லது உருவகமொன்று அமைப்பொன்று, எனப்பொருள்படும்;

"செயல்நுணுக்க பகுப்பாய்வு" என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பெருமளவில் தயாரிப்பதற்கு நிதியளித்தல் என்பவற்றுடன் தொடர்புடைய திருப்பங்களையும் வடிவங்களையும் அடையாளம் காண்பதற்கு தகுதிவாய்ந்த ஏனைய அதிகாரிகளினால் வழங்க முடியுமான தரவு உள்ளடங்கலாக கிடைக்கக் கூடியதாகவுள்ள மற்றும் பெறக்கூடியதாகவுள்ள தகவலின் பயன்பாடு எனப்பொருள்படும்;

"மேற்பார்வை அதிகாரசபை" என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் மேற்பார்வை செய்வதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டங்களுடன் நிறுவனங்களினால் இணங்கியொழுகுதலை வலுவுறுத்துவதற்கு தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபை எனப்பொருள்படும், ஆனால், 14அ என்னும் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறை உள்ளடக்காது;

"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கை" என்பது, இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையொன்று எனப்பொருள்படும்;

“பயங்கரவாதச் செயல்” என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளை கொண்டிருத்தல் வேண்டும்;

“கொடுக்கல் வாங்கல்” என்பது, நிதித்தொழிலுடன் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழிலுடன் அல்லது உயர் தொழிலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் உள்ளூர் அல்லது சர்வதேச செயற்பாடு எனப்பொருள்படும்;

“ஆதனம் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்” என்பது –

(அ) ஒரு கொள்வனவு, விற்பனை, கடன், அறவீடு, ஈடு, சோந்தை, அடைமானம், அறுதி, ஒப்படைத்தல், சாட்டுதல், செய்தல், கடன் பற்றுறுதி மாற்றீடு, அனுப்புகை, கொடை, நன்கொடை, நம்பிக்கைப் பொறுப் பொன்றின் உருவாக்கம், கொடுத்துத் தீர்த்தல், ஏதேனும் பொருளின் வைப்பீடு, உட்பட, மீளப் பெறுதல், சொத்துக் களிடையே கைமாற்றம் அத்துடன் கடன் வசதி நீடிப்பு;

(ஆ) ஏதேனும் முகவராண்மை அல்லது அற்றோனித் தத்துவமளிப்பு; அத்துடன்

(இ) எவ்வாறான வடிவத்திலும் அல்லது எவ்வாறாக விபரிக்கப்படினும் அல்லது எத்தன்மையதான விவரணத்திலும் அல்லது தன்மையிலுமான ஆதனத்தின் முழுமையான அல்லது பகுதியளவிலான ஏதேனும் உரிமை, உரித்து, அக்கறை அல்லது சிறப்புரிமை தற்காலத்திலாயினுஞ்சரி, வருங்காலத்திலாயினுஞ்சரி, உடைமையாக்கப்பட்டதாயினுஞ்சரி, பின்நிகழ்வதாயினுஞ்சரி அத்தகைய ஆதனம் எவரேனும் ஆளுக்கு உரித்தாக்கப்படுவதால் விளையும் வேறு ஏதேனும் ஆதனவளிப்பு அல்லது கையாளுகை,

என்று பொருள்படும்;

“சட்டவிரோதமான செயற்பாடு” என்பது, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“எண்ணிமச் சொத்து” என்பது, எண்ணிம முறையில் வியாபாரஞ்செய்யப் படமுடியுமான அல்லது கைமாற்ற முடியுமான மற்றும் கொடுப்பனவு அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியுமான பெறுமதியின் ஓர் எண்ணிமப் பிரதிநிதித்துவம் என்று

பொருளாகும். ஆனால், அங்கீகாரம்பெற்ற ஏனைய நாணயங்கள், பிணையங்கள் மற்றும் ஏனைய நிதிசார் சொத்துக்களை உள்ளடக்காது; அத்துடன்

"எண்ணிமச் சொத்துச் சேவை வழங்குநர்" என்பது, வேறோர் ஆள் சார்பில் பின்வரும் செயற்பாடுகளுள் அல்லது தொழிற்பாடுகளுள் ஒன்றை அல்லது அதற்கதிகமானவற்றை வழங்குகின்ற, நிருவகிக்கின்ற, முகாமைசெய்கின்ற அல்லது நடாத்துகின்ற எவரேனும் ஆள் எனப்பொருள்படும்:-

(அ) எண்ணிமச் சொத்துக்களுக்கும் அங்கீகாரம் பெற்ற நாணயங்களுக்கும் இடையேயான பரிமாற்றம்;

(ஆ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிமச் சொத்துக்களின் வகைகளுக்கிடையேயான பரிமாற்றம்;

(இ) எண்ணிமச் சொத்துக்களை கைமாற்றுதல்;

(ஈ) எண்ணிமச் சொத்துக்களை அல்லது எண்ணிமச் சொத்துக்களின் மீதான கட்டுப்பாட்டை

இயலச் செய்கின்ற சாதனங்களை காப்பாக வைத்திருத்தல் அல்லது நிருவகித்தல்; அத்துடன்

(உ) ஒரு வழங்குநரின் முனைவில் அல்லது ஓர் எண்ணிமச் சொத்தின் விற்பனையில் பங்குபற்றுதல் மற்றும் அவை தொடர்பான நிதிசார் சேவைகளை வழங்குதல்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**40.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் த்ணைக்களத்தில் பத்ப்பிக்கப்பெற்றது